Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :217 ஆனி 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை 03 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 'மாஸ்க்' பரப்புரைக்கு விதிக்கப்பட்டது தடை

கொழும்பு, ஜூலை 3
முகக்கவசங்களில் வேட்பாளர்களின் இலக்கங்கள், பெயர்கள் மற்றும் படங்கள் போன்றவற்றை அச்சிட்டு தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்த முடியாது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. 19

## கடற்றொழிலுக்கு சென்றவரை காணவில்லை

பளை, ஜூலை 3
பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் கடற் பகுதியிலிருந்து கடற்தொழிலுக்குச் சென்ற 35 வயதுடைய ஒருவரைக் காணவில்லை என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் பகல் 1.30 மணிய 19

## இளைஞரின் சடலம் மீட்பு

வவுனியா, ஜூலை 3
வவுனியா வேப்பங்குளம் 6ஆம் ஒழுங்கைக்கு அண்மித்த பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற் 15

## இலங்கை அணியினருக்கு ஆதரவாகக் கவனவீர்ப்பு!


19

## நேற்று 10 மணிநேரமாக சங்காவிடம் விசாரணை!


19

# வெள்ளைக்கொடிகளுடன் புலிகள் சரணடைந்தனர்!

## சவேந்திரவின் கருத்தை மறுக்கிறார் பொன்சேகா போதிய ஆதாரம் உண்டு என்றும் தெரிவித்தார்



கொழும்பு, ஜூலை 3
இறுதிப் போரில் வெள்ளைக் கொடிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் இராணுவத்தினரிடம் சரணடைய வந்தார்கள் என்பதை நான் அறிந்தேன். இதனுடன் தொடர்புடைய குரல் பதிவுகளும் என்னிடம் உள்ளன. கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அதை நான் வெளிப்படையாக முன்வைக்கவும் தயாராக இருக்கின்றேன்' இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். 19

## வீடொன்றின் மீது நேற்று தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடு மீது இனம் தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்த சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
யாழ்ப்பாணம் 16

## 99வீத தொல்பொருள்கள் விகாரைகளுக்குரியதாம்!

*மேதானந்த தேரரின் அடுத்த கண்டுபிடிப்பு*

கொழும்பு, ஜூலை 3
வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்பதற்கான எவ்வித சான்றுகளும் இல்லை என்பதை உறுதியாகவே கூறுகின்றேன். அதேபோன்று அங்கு காணப்படும் 99 சதவீதமான தொல்பொருள்கள் விகாரைகளுக்குரியன என்று தொல் 16

## புலிகள் எண்ணம் வரவே கூடாதாம்!

வடக்குப் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு கடிதம் 19



## சுமந்திரன் சிறிதரனின் கொடும்பாவிகள் வடமராட்சியில் நேற்று எரிக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜூலை 3
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகியோரின் கொடும்பாவிகள் வடமராட்சியில் நேற்று மாலை எரிக்கப்பட்டன. 16

## சுமந்திரன், சிறிதரனுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை

கோரிக்கை விடுக்கிறார் மகளிர் அணி முன்னாள் செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 3
கட்சியின் தலைமை எடுக்கின்ற முடிவுகளுக்கு நான் கட்டுப்படுகின்றேன். என்மீது நடவடிக்கை எடுப்பது போன்று கட்சியிலுள்ள சிலருக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை 15

DFCC சஹநய
சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கான சலுகைக் கடன் திட்டம்

DFCC வங்கியானது COVID -19 காரணமாகப் பாதிக்கப்பட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு சலுகை வட்டி வீதத்துடன் கூடிய விசேட கடன் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

கடன் திட்டம்
கடன் தொகை - ரூபா.5 - 25 மில்லியன்
ஆண்டு வட்டி வீதம் - 9%
மீளச் செலுத்தும் காலம் - 04 ஆண்டுகள்
கடன் வசதியின் வகை - தவணைக் கடன்கள் / நிரந்தர தொழிற்படு மூலதனம்

முன்னுரிமை வழங்கப்படும் தொழில் துறைகள்
ஏற்றுமதி சார்ந்த தொழில் துறைகளில் இயங்கும் நிறுவனங்கள்.



24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# 13ஆவது திருத்தத்தை என்றும் பாதுகாப்பேன்!

## சஜித் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஒருமித்த நாட்டுக்குள் 13ஆவது அரசமைப்பையும் அதனூடான அதிகாரப் பகிர்வையும் பாதுகாப்பேன் என்று சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுண் கடனால் பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சிறப்பு திட்டமொன்றை அறிமுகம் செய்து அதனூடாக நிவாரணங்கள் வழங்க தீர்மானித்துள்ளேன். அதேபோன்று வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளேன். கிராமிய மற்றும் நகர நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி தனது பிரதேச அபிவிருத்திகளை அந்த மக்களே தீர்மானிக்கக் கூடிய வகையில் திட்டத்தை உருவாக்குவேன். அனைத்து சந்தர்ப்பங்களிலும் 13 ஆவது அரசமைப்பைப் பாதுகாத்து செயற்படுவேன். ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வை மையப்படுத்திய மாகாண சபையும் என்னால் பாதுகாக்கப்படும் - என்றார். (ம-ஒ,5)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு கிராம ராஜ்ஜிய முறை அறிமுகம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 3

**போரால் பாதிக்கப்பட்ட உங்கள் பிரதேசத்தை தென்பகுதிக்கு சமமாக மேம்படுத்த பெரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்படுவேன். அதற்கு ஏதுவாக 'கிராம ராஜ்ஜிய' முறைமையை உருவாக்குவேன். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 83.8 சதவீதமான மக்கள் வாக்குகளை எனக்கு வழங்கி ஆதரவு தந்தீர்கள். அதற்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் உங்கள உறவுகளை வெற்றியடையச்செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

காலம் காலமாக இப்பிரதேசத்தில் போட்டியிடும் பலர் இம்முறை வெற்றிபெற்றால், இன்றைய அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு முண்டு கொடுப்பவர்களாகவே இருக்கின்றனர். நீங்கள் உங்களுக்கு சேவை செய்பவர்கள் யார் என தெரிவு செய்து வாக்களிக்க வேண்டும்.

எனது கரங்களைப் பலப்படுத்தி ஓகஸ்ட் 5ஆம் திகதி பெரும்பான்மை பலத்துடன் பிரதமரானால் 24 மணி நேரத்தில் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவேன். நீங்கள் முன்பு பார்த்திராத கண்டிராத பல நன்மைகளை ஏற்படுத்துவேன். இன்றைய அரசு மோசடிகளும் ஊழல்களும் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

பொறுப்பான ஒரு எதிர்க்கட்சித் தலைவன் என்ற வகையில் துணிச்சலுடன் அவற்றை வெளிப்படுத்தி வருகிறேன். மலரப்போகும் எனது ஆட்சியில் இவ்வாறான ஊழல் மோசடிகளுக்கு இடமிருக்காது. நான் எனது தந்தை பிரேமதாஸவின் வழியில் வந்தவன். தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்ற பேதம் எனக்கில்லை. எனது தந்தை எல்லா இனத்தவர்களுடனும் சகோதரத்துவத்துடன் இருந்தவர். அதுவே எனது கொள்கையும்.

நான் ஆட்சிக்கு வந்த 24 மணி நேரத்தில் எரிபொருள்களின் விலையைக் குறைப்பேன். கொரோனாவால் பொருளாதாரத்தை இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுப்பேன். சுயதொழில்களை மேற்கொள்பவர்களுக்கு 4 வீத வட்டியில் இலகு கடன்களை வழங்குவேன். என்மீது நம்பிக்கை வைத்து எனது கரங்களைப் பலப்படுத்துங்கள். நான் என்றும் உங்களுக்கு கடமைப்பட்டவனாக இருப்பேன். உங்கள் பிரதேசத்தில் நீங்கள் என்றும் கண்டிராத அபிவிருத்தியையும் சுதந்திரமாக வாழவும் உத்தரவாதம் அளிக்கின்றேன், என்றார். (ஒ.5,22)

# வாக்களிப்பை குறைக்க ஆணைக்குழு சதியாம்!!


## விமலின் கண்டுபிடிப்பு



பொதுத்தேர்தலில் வாக்களிப்பைக் குறைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முயற்சி செய்கின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் இராஜதந்திர தூதுரகங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்துக்கு அமையவே, தேர்தல்கள் ஆணைக்குழு, வாக்களிப்பு வீதத்தை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. புதிய நாடாளுமன்றம் ஒட்டுமொத்த மக்களினதும் ஆணை பெற்றது அல்ல, ஒரு பகுதி மக்களின் ஆணையை மட்டுமே கொண்டது என்று காண்பிக்கவே, வாக்களிப்பை குறைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய தூதரகங்கள் முயற்சிக்கின்றன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதை வெளிப்படுத்தும் வகையில், பொதுமக்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். கடந்த தேர்தல்களைவிட அதிகளவு வாக்களிப்பு இடம்பெறவேண்டும் - என்றார். (ம-ஒ,5)



# வீதியில் சென்ற கார் திடீரென தீப்பற்றியது

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 3

கொழும்பு - வாட் ப்ளேஸில் நேற்று மாலை காரொன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது. இயந்திர கோளாறு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. (ம)

# சுகாதார வழிகாட்டல்களுக்கு சட்டமா அதிபரால் அனுமதி!

பொதுத்தேர்தலுக்காக சுகாதார அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சுகாதார வழிகாட்டு முறைகளுக்கு சட்டமா அதிபர் அனுமதி அளித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை பாதுகாப்பான முறையில் நடத்துவதற்கான சுகாதார வழிகாட்டு முறைகளை சுகாதார அமைச்சு தயாரித்துள்ளது. இந்த வழிகாட்டு முறைகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று கடந்த பல வாரங்களாக கூறப்பட்டு வந்தபோதும், சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைப்பதில் இழுபறிகள் ஏற்பட்டிருந்தன.

இந்த நிலையில், சுகாதார அமைச்சின் இந்த வழிகாட்டு முறைகள் அடங்கிய வர்த்தமானியை வெளியிடுவதற்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என்று, சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் நிஸார ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சுகாதார அமைச்சால் இந்த வழிகாட்டு நெறிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் எந்தநேரமும் வெளியிடப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# பணியாளர்களை நீக்கியமை சட்டரீதியான நடவடிக்கையா?

## ஆனோல்ட் ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயரான நான் விடுமுறையிலிருந்தபோது எனது தனிப்பட்ட பணியாள் தொகுதியினரை நீக்குமாறுகோரி பிரேரணை நிறைவேற்றப்பட்டமை சட்டரீதியாக செல்லுபடியாகுமா என்று கேள்வியெழுப்பி வடக்கு மாகாண ஆளுநருக்கு, யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் இ.ஆனோல்ட் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேயரின் பணியாள் தொகுதிக்கு 6 பேர் நியமிக்கப்பட்டலாம். அவர்களைச் சபையின் பணியாளர்களில் இருந்து நியமிக்குமாறு ஏனைய கட்சிகள் தெரிவித்த நிலையில் தனக்குத் தேவையான ஊழியர்களை தற்காலிக அடிப்படையில் இணைக்க சபையின் ஒப்புதலுடன் ஆறு பேரை நியமித்திருந்தார் ஆனோல்ட்.

இந்த நிலையிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதால், மூன்று பணியாளர்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மூவர் மட்டும் பணியாற்றினர். அவர்களையும் இடைநிறுத்துமாறு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சபையின் அனுமதியுடன் நியமித்த ஊழியர்களை, மேயர் விடுமுறையில் இருந்தபோது நீக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சட்ட ரீதியிலானது தானா என்று அறியத்தருமாறு கோரியே அந்தக் கடிதத்தை ஆனோல்ட் அனுப்பி வைத்துள்ளார். (ம,ஒ,5)

வடக்கு மக்களின் ஆதரவின்றி

# ஜனாதிபதி தெரிவாக முடியாது என்பதை பொய்ப்பித்தது நீங்களே

## தென்பகுதி மக்களை உசுப்பி மஹிந்த வாக்குவேட்டை



**யாழ்ப்பாணம், ஜூலை 3**

**வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய முடியும் என்பதை தெற்கு மக்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். எனது ஆட்சியிலேயே வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன என்பதை தமிழ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமாயின் பொதுமக்கள் முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும் என்பது கட்டாயமாகும் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

காலி பத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் முன்னணி வெற்றிபெறுவதுடன் காலி மாவட்டத்திலும் வழமையைக் காட்டிலும் அதிக ஆசனங்களை கைப்பற்றும். இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது அவசியமாகும். அரசமைப்பைத் திருத்தம் செய்யவும், தற்போதைய சவால்களை வெற்றிகொள்ளவும் பெரும்பான்மை பலத்தை பெறுவது கட்டாயமானதாகும்.

ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டுமாயின் அவ்வரை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் அரசை அமைக்க வேண்டும். கடந்த அரசைப் போன்று முரண்பாடான அரசு தோற்றம் பெற்றால் அனைத்து இலக்குகளும் பலவீனப்படுத்தப்படும். இவ்வாறான நிலை இனியும் தோற்றம்பெறக் கூடாது. நாட்டுக்கும், ஊருக்கும் சேவையாற்றுபவர்களை மக்கள் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்ய வேண்டும்.

கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் ஆகியோர் பொதுமக்கள் முன்னணியைப் பிரதிநிதித்தவப்படுத்தி இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தமக்கானவரைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. அந்த உரிமையை முறையாகப் பயன்படுத்துவது அவசியமானதாகும். வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியாது என்பதை இல்லாதொழிக்க உங்களின் வாக்குகளால் முடிந்தது - என்றார்.

(ம-ஒ,5)

## 24 மணிநேரத்தில் 1,779 பேர் கைது

கொழும்பு, ஜூலை 3

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் கடந்த 24 மணிநேரத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் ஆயிரத்து 779 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வைத்திருந்தமைக்காக 371 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோத மதுபானம் தொடர்பான சுற்றிவளைப்புக்களில் 389 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 34 லட்சத்து 97 ஆயிரத்து 875 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து கல்கட்டஸ் ரகத் துப்பாக்கி ஒன்றும், 7 ரிபீடர் ரகத் துப்பாக்கியும், 105 தோட்டாக்களும், 7 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை, பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 292 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்களுக்குள் உள்ளடங்காத குற்றங்களைப் புரிந்த 720 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி1)



## கட்சி தாவினார் நகரசபை உறுப்பினர்

கிண்ணியா நகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக உறுப்பினராகச் செயற்பட்டு வந்த எம்.டி.ஹாரிஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குத் தாவினர்.

திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார். தேர்தல் கள நிலவரம் தற்போது திருகோணமலையில் சூடு பிடித்துள்ளது இதில் கட்சி விட்டு கட்சி மாறுதல் சம்பவங்களும் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-40)

## இறைவரி திணைக்களம் திங்கள் முதல் வழமைக்கு!

கொழும்பு, ஜூலை 3

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது எதிர்வரும் திங்கட்கிழமை முதல், வழமை போன்று செயற்படும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நந்துன் குருகே தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## யாழ். மேயரின் பணியாளர்கள் நிறுத்தம் தேர்தல் விதிமுறையை மீறிய செயலா?

### தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயராக இருந்த இ.ஆனோல்ட் நியமித்த பணியாளர்களை இடைநிறுத்தியமைக்கு எதிராக, பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த இடைநிறுத்தம் தேர்தல் விதிமுறை மீறிய செயல் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர மேயர் இ.ஆனோல்ட் தனது பணியாள் தொகுதியில் 6 பேரை நியமித்திருந்தார். நாடாளுமன்றத் தேர்தலில் இ.ஆனோல்ட் போட்டியிடுவதால் பதில் முதல்வராக ஈசன் பதவியேற்றியிருந்தார்.

இதனையடுத்து பணியாள் தொகுதியினரை இடைநிறுத்தும் தீர்மானம் மாநகர சபை அமர்வில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனையடுத்து கடந்த மாதம் 26ஆம் திகதியிலிருந்து அவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர். தேர்தல் காலத்தில் பதவி உயர்வு, இடமாற்றம், புதிய நியமனம், பணி நீக்கம் என்பன மேற்கொள்ள முடியாது என்ற அடிப்படையில் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர். (ம-ஒ,5)

## கஞ்சிபான இம்ரானிடமிருந்து மீண்டும் தொலைபேசி மீட்பு!

கொழும்பு, ஜூலை 3

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகப் பூசா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கஞ்சிபான இம்ரானிடம் இருந்து கைபேசி உட்பட உபகரணங்கள் சில பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் பூசா சிறைச்சாலையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கஞ்சிப்பான இம்ரான் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்திலிருந்து அன்ட்ரொயிட் ரக கைபேசியொன்றும், சிம் அட்டைகள் இரண்டும், சார்ஜர் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் கஞ்சிபான இம்ரான் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடத்தில் இருந்து கைபேசி உள்ளிட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன. (எ-ரி1)

# பிரிட்டன் தூதரக அதிகாரிகளுடன் யாழ். மாவட்டச் செயலர் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 3

பிரிட்டன் தூதரகத்தின் பிரதித் தூதுவர் நெஜில் கவனாக் மற்றும் அரசியல் செயலர் சிவோன் லெதம் ஆகியோர் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கில் அரசு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள், கொரோனா பாதிப்பின் போது யாழ்ப்பாணத்தில் எவ்வாறான நிலைமை காணப்பட்டது, தற்போதைய யாழ்ப்பாண நிலவரம் என்பன தொடர்பாக பிரதித் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். (ஒ,5,20)

# எங்களின் ஐ.ம.ச. ஆட்சியில் இன,மத வாதங்கள் அழியும்

## மன்னாரில் சஜித் உறுதி

**மன்னார், ஜூலை 3**

**நாட்டிலே இனவாதத்தையும்,மதவாதத்தையும் இல்லாமலாக்கி சகலரும் சமமான உரிமையுடன் வாழக்கூடிய நல்லதொரு இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்கின்ற பெரு விருட்சத்தை உருவாக்கி மக்களாகிய உங்களிடம் அதைக் கையளித்திருக்கின்றோம் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னாரில் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எனது வெற்றிக்காக முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பெரும் தியாகங்களைச் செய்தார்கள் அவர்கள் மட்டும் இல்லை, அவர்கள் சார்ந்த கட்சிகளும், கட்சிகளின் பிரதிநிதிகளும் எங்களின் வெற்றிக்காகப் பாடுபட்டார்கள். நான் நன்றி உள்ளவன் என்ற வகையில் செய்த உதவிக்கு எதிர்காலத்தில் இந்த மக்களுக்கான அனைத்து அபிவிருத்திகளையும் அவர்களுடைய பாதுகாப்பையும் இந்த நாட்டில் வாழ்கின்ற எனைய மக்களது பாதுகாப்பையும், அபிவிருத்தியையும் உறுதிப்படுத்தும் செயல்பாட்டை முன்னெடுப்பேன். இனவாதம் என்பது ஒரு விசக்கிருமியாகும். இந்தக் கிருமியின் ஊடாக நாடு படுகின்ற துன்பங்களை நீங்கள் அறிவீர்கள். இதனை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றால் நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். ஒற்றையாட்சி என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை. இங்கு வாழ்கின்ற அனைத்துச் சமூகங்களும், தங்களுடைய வாழுகின்ற உரிமை, சம உரிமை, அரசியல் கலாசார உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. அதற்காக நாங்களும் பாடுபட வேண்டியுள்ளது. குறிப்பாக சட்டத்தில் மட்டும் ஒற்றையாட்சி என்று குறிப்பிட்டிருந்தால் ஒருபோதும் அதனை நடைமுறைப்படுத்த முடியாது. அதற்காக பல தியாகங்களையும் முன்னெடுப்புக்களையும் நாங்கள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி நான் பிரதமராக வந்தவுடன் இந்த நாட்டில் இருக்கின்ற இனவாத,மதவாத சக்திகளுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பதோடு, இந்த நாட்டிலே இனவாதத்தையும், மதவாதத்தையும் இல்லாமல் ஆக்கி சகலரும் சமமான உரிமையுடன் வாழக்கூடிய நல்லதொரு இலங்கையைக் கட்டியொழுப்புவதற்காக நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி என்கின்ற பெரு விருட்சத்தை உருவாக்கி உங்களுக்கு அவற்றைக் கையளித்திருக்கின்றோம்.

எனவே நீங்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசிச் சின்னத்தை வெற்றியடையச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார் (ப-56)

# தனிப்பட்டோருக்கு 4 வீதத்தில் கடன்

## சாவகச்சேரியில் சஜித் உறுதி

கொடிகாமம், ஜூலை 3

தேர்தலில் வெற்றிபெற்று ஒரு வாரத்துக்குள் சிறிய நடுத்தர அல்லது தனிப்பட்டவர்களுக்கான கடனை 4 வீதத்தில் வழங்குவேன் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வடக்கு மக்களின் வலி, வேதனை எனக்குத் தெரியும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இங்கே பல பிரச்சினைகள் இருக்கின்றன பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரச்சினைகள், அவர்களுக்கான சுயதொழில் பிரச்சினைகள், கடன்பிரச்சினைகள் தொழில் வாய்ப்பின்றி வேலை வாய்ப்பின்றி இருக்கும் பிரச்சினைகள் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளை முன்வைத்து நான் வெற்றி பெற்றாலும் வெற்றி பெறாவிட்டாலும் இந்த நிர்வாக மாவட்டத்தில் இருக்கின்ற தேர்தல் தொகுதிகளில் எனது கண்காணிப்பின் கீழ் சிறப்பாக வீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பேன்.

நீங்கள் இந்த தேர்தல் மாவட்டத்தில் உங்கள் வாக்குகளைச் செலுத்தியிருப்பீர்கள். இந்த முறை சஜித் பிரேமதாஸ ஆகிய என் மீது நம்பிக்கை வைத்து தொலைபேசி சின்னத்துக்கு நீங்கள் வாக்களித்து பலமாக்குங்கள். எதிர்வரும் ஐந்தாம் திகதி நிச்சயமாக தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகின்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு முழு இலங்கை மக்களும் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அரசாங்கம் பொறுப்பை ஏற்கும்போது ஒரு பொய்யான வாக்குறுதியைக் கொண்டு வந்தது. சிறு கைத்தொழில் நடுத்தரக் கைத்தொழில், நான்கு வீத வட்டி அடிப்படையில் தனிப்பட்டவர்களுக்கான கடன் வழங்குவதாக வாக்குறுதி கொடுத்தார்கள், ஆனால் தற்போது வரை எந்த ஒருவருக்கும் அந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கவில்லை. நான் உறுதி அளிக்கிறேன் தேர்தலில் வெற்றி பெற்று ஒரு வாரத்துக்குள் சிறிய நடுத்தர அல்லது தனிப்பட்டவர்களுக்கான கடனை 4 வீதத்தில் வழங்குவேன். வடக்கு மக்களின் வலி, வேதனை எனக்குத் தெரியும். வடக்கு மக்கள் எப்படியான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதும் எனக்குத் தெரியும் - என்றார். (ப-159,131,9)



# நல்லை ஆதீனத்திடம் ஆசி பெற்றது முன்னணி

யாழ்ப்பாணம், ஜூலை 3

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

இந்தச் சந்திப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவருமான கலாநிதி ஆறு திருமுருகனும் பங்கேற்றார்.

நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட வேட்பாளர்கள் பங்கேற்றனர். (ப-20)

# சர்வதேச அமைப்பில் மங்களவுக்கு பதவியா?

கொழும்பு, ஜூலை 3

சர்வதேச அமைப்புகளில் பதவியைப் பெறுவதற்காக நான் நாடாளுமன்ற அரசியலில் இருந்து ஒய்வு பெறவில்லை. எனவே, அந்தக்கூற்றுத் தவறானது. என்று முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சர்வதேச அமைப்பொன்றில் பதவியைப் பெறுவதற்குதானே நீங்கள் எம்.பி. அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ளீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் கொள்கை அடிப்படையில் எடுத்த தீர்மானம் அதுவாகும். மீண்டும் தேசியப்பட்டியல் ஊடாகவேனும் நாடாளுமன்றம் செல்லமாட்டேன். அதே போல் தோல்வி பயத்தாலும் ஒதுங்கவில்லை. ஏனெனில் தோல்விகளில் இருந்து மீண்டெழுவது எப்படி என்பது எனக்குத் தெரியும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பில் எழுப்பப்பட்டகேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டுக்கு பல நன்மைகளை வழங்கும் உடன்படிக்கை அது. எனவே, அமெரிக்க விரோதக் கருத்துகளுக்கு அஞ்சாமல் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு நான் முழு ஆதரவையும் வழங்குவேன் -என்றார். (ப-44)

# ஜனநாயகத்துடன்கூடிய அபிவிருத்தியே மக்களின் எதிர்பார்ப்பு

## அகிலதாஸ் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 3

சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துடன்கூடிய அபிவிருத்தியை தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு தொலைபேசியே சரியான தெரிவு என ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்தார்

கொற்றாவத்தையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற கொடிய போரால் அழிவடைந்த தமிழர் தாயகத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை மஹிந்த காலத்தில் இருந்தது. அதன் காரணத்தினால் அன்றைய காலத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் நான் போட்டியிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துடன்கூடிய அபிவிருத்தியே மக்களின் தேவையாக இருக்கின்றது. அதனையே மக்களும் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையை ஏற்படுத்தக்கூடிய தலைமை ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியைச் சேர்ந்த சஜித் பிரேமதாஸவிடம் இருப்பதாக மக்கள் உணர்கிறார்கள் - என்றார். (ப-115)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நினைவுகளை அழித்தல்

கொரோனாவுக்குப் பின்னர் பாடசாலைகள் மீளத்திறக்கப்படவுள்ள நிலையில், ஒரு சுற்றுநிருபம் வடக்கின் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் பாடசாலைகளில் விடுதலைப்புலிகளை மீள நினைவூட்டுவது போல எந்தவொரு உரையாடலோ, நடவடிக்கையோ பாடசாலைகளில் இடம்பெறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சுற்றுநிருபம் இப்போது வெளியிடப்பட்டதல்ல. கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதியிடப்பட்ட இந்தச் சுற்றுநிருபம் கொரோனாவால் பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டதால் கிடப்பில் இருந்தது. இப்போது மீண்டும் தூசு தட்டப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தை வடக்குப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கவேண்டிய அவசியம் என்ன? காரணமிருக்கிறது. கடந்தகாலங்களில் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளின் போது, சில பாடசாலைகளில் இல்லங்களுக்கான அமைவிடங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நினைவூட்டுவதாக அமைக்கப்பட்டிருந்தன. புலிமுகம், தமிழீழ வரைபடம், போர்ப்படகுகள், புலிகளை நினைவூட்டும் வகையிலான இல்லங்களின் பெயர் என்பன அதிகாரத்தரப்புக்கு எரிச்சலூட்டுவதாக அமைந்திருந்தன. என்னதான் புலிகளுக்கு முள்ளிவாய்க்காலில் முற்றுப்புள்ளி வைத்துவிட்டாலும், அவர்களின் நினைவுகள் மக்களிடம் தொடர்ச்சியாகப் பேணப்படுவது தமக்கு எப்போதும் ஆபத்தானதே என்பதை அவர்கள் நன்கறிவார்கள். எனவே அதை முளையிலேயே இல்லாமல் செய்யும் வண்ணம் இப்படி ஒரு சுற்றுநிருபத்தை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை நினைவூட்டும் வகையிலான இல்ல அமைவிடங்கள், பெயர்கள் என்பவற்றை மாணவர்களும், ஆசிரியர்களும் செய்தபோது அதைத் தடுக்க எவ்வித வழியும் இருக்கவில்லை. ஆனால் இப்போதே இந்த சுற்றுநிருபத்தைக் காண்பித்து அவற்றை இல்லாமல் செய்யும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது இன்னொருவகையில் ஆபத்தானதும் கூட. இந்தச் சுற்றுநிருபத்தில் எவ்வாறான விடயங்கள் விடுதலைப்புலிகளை மீள் நினைவூட்டுவன என்று வரையறுக்கப்படவில்லை. இதனால் பாடப்புத்தகத்தில், காட்டில் வாழும் புலிகளைப் பற்றி படித்தாலோ, அல்லது கண்காட்சிகளின் போது காட்டுப்புலிகளை வரைந்தாலோ, உருவமாகச் செய்தாலோகூட அவை விடுதலைப்புலிகளை நினைவூட்டுவதாகச் சொல்லித் தடை செய்யப்படலாம். அதைப்போல வெதுப்பகம், இரும்பகம், மகிழுந்து, குளிர்களி போன்ற தூய தமிழ்ச் சொற்களும், தூய தமிழிலான பெயர்களும் விடுதலைப்புலிகளை நினைவூட்டக் கூடியவையே. இனிமேல் அவற்றைத் தவிர்க்காவிடின் சட்டச்சிக்கல்களை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எதிர்கொள்ளக்கூடும்.


ஆனால் நிலவுக்கு பயந்து பரதேசம் போகமுடியாதது போல நினைவுக்குப் பயந்தும் பாடசாலைகளில் இப்படியான கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதன் மூலம் தமிழ் மக்களின் மனதில் இருந்து புலிகள் பற்றிய இரைமீட்டல்களை இல்லாதொழிக்க முடியுமென நினைப்பதைவிட முட்டாள்தனம் வேறு கிடையாது. அதிகார வர்க்கத்தில் உள்ளோருக்கு இது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நினைவுகளை அழிப்பதாக நினைத்து இன்னும் வளர்க்கவே உதவப்போகிறார்கள்.

# புதிய அரசியல் சாசனமே கூட்டமைப்பின் நோக்கம்

## அதன் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

மூதூர், ஜூலை 3

**நடைபெறவுள்ள பொதுத்தேர்தலைத் தொடர்ந்து அமையப் போகும் புதிய நாடாளுமன்றத்தில் ஒரு புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்படவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**



திருகோணமலை, குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நாவற்சோலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதிய அரசியல் சாசனம் தொடர்பான கடமை கடந்த நாடாளுமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அது நிறைவடையவில்லை. நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவருவதற்கு கடந்த காலங்களில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தலைவர்களான ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா அம்மையார், மஹிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பல முன்னெடுப்புக்கள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக நாம் பெரும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம். புதிய நாடாளுமன்றம் உருவாகின்றபோது இந்த சகல விடயங்களையும் உள்வாங்கிக்கொண்டு அதி உச்சமானதும் நிலைத்திருக்கக் கூடியதும் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருத்தி அமைக்க முடியாத ஒருமித்த நாட்டுக்குள் பிளவுபடாத நாட்டுக்குள் ஓர் அரசியல் தீர்வு ஏற்படவேண்டும் என்பதே எமது நோக்கம். இவ்வாறான கருத்தை பொது ஜன பொரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. தேசிய மக்கள் சக்தியினுடைய தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இது விடயமாக நாடாளுமன்றத்தில் நாங்கள் உரை நிகழ்த்தி வெளிக்கொணர்ந்துள்ளோம். அதை மறுக்கவில்லை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவை பதிவிலும் எழுத்திலும் உள்ளன. இவ்வாறான கருத்துக்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து உள்வாங்கி புதிய நாடாளுமன்றம் உருவாகிய பின்னர் ஒரு திருப்திகரமான அரசியல் சாசனம் உருவாக்கப்படவேண்டும். அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது அமுல்படுத்தப்பட வேண்டும். இதுவே புதிய நாடாளுமன்றம் தொடர்பாக எமது எதிர்பார்ப்பு - என்றார். (ப)

# கல்வியியற் கல்லூரிகள் ஜூலை 7 இல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 3

அனைத்து தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் இரண்டாம் ஆண்டு ஆசிரியர் பயிலுநர்களுக்கான (2017/2019 வருடம்) வதிவிட கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 31 வரை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் இரண்டாம் ஆண்டு கற்றலை நிறைவு செய்த (2016/2018 வருடம்) ஆசிரியர் பயிலுநர்களுக்கு இம் மாதம் 7 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை உள்ளக செயற்பாட்டு பயிற்சிகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களுக்கான (2017/2019 வருடம்) உள்ளக பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

2018/2020 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களின் வதிவிட கற்றல் நடவடிக்கைகள் ஓகஸ்ட் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 38 சிறு மின்னுற்பத்தி நிலையங்ளை மீட்க மஹிந்த நடவடிக்கை

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இடைநிறுத்தப்பட்டிருந்த 38 சிறு மின்னுற்பத்தி நிலையங்களை மீண்டும் மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் குறித்த விடயம் தொடர்புடைய ஒப்பந்தங்களில் கையெழுத்திட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இலங்கை மின்சார சபையின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த 38 சிறிய மின் உற்பத்தி நிலையங்களின் ஊடாக தேசிய மின் உற்பத்திக்காக 75 மெகாவோட் மின்சாரம் இணைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# கட்டுநாயக்கவில் தரையிறங்கிய 4 விமானங்கள்

கொழும்பு, ஜூலை 3

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் காரணமாக இலங்கைக்கு வர முடியாமல், மூன்று நாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 91 பேரை ஏற்றிய 4 விசேட விமானங்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வியாழக்கிழமை வந்தடைந்தன.

கட்டாரின் டோஹா நகரிலிருந்து முதல் விமானம் நாட்டை வந்தடைந்தது. அதில் 21 இலங்கையர்கள் வந்தனர்.

அதனைத் தொடர்ந்து மாலைதீவில் சிக்கியிருந்த இலங்கையர்களை ஏற்றிய 2 விமானங்கள் நாட்டை வந்தடைந்தன. இதில் முதல் விமானத்தில் 61 பேரும், இரண்டாவது விமானத்தில் 8 பேரும் வந்தடைந்தனர்.

மற்றுமொருவர் தனி விமானத்தில் அபுதாபி நகரிலிருந்து நாட்டை வந்தடைந்தார்.

இவர்கள் அனைவரும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பான அமைச்சர்களின் கருத்து அடுத்த வாரம்

## பந்துல குணவர்தன தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 3**

**எம்.சி.சி உடன்படிக்கை சம்பந்தமாக மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் அமைச்சரவையின் நிலைப்பாட்டை ஜனாதிபதி கோரியுள்ள நிலையில், அடுத்த வாரமளவில் அமைச்சர்கள் தமது கருத்துகளை முன்வைப்பார்கள் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை நேற்றுத்தான் (நேற்று முன்தினம்) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்த பின்னர் கருத்துகளை முன்வைக்குமாறு அமைச்சர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். இதன்படி அறிக்கையை ஆராய்ந்த பின்னர் அமைச்சர்கள் கருத்துகளை முன்வைப்பார்கள். எனது கருத்துகள் அடங்கிய அறிக்கை அடுத்தவாரம் கையளிக்கப்படும். அடுத்தவாரம் இது பற்றி மேலதிகமாக கலந்துரையாடமுடியும். எது எப்படியோ இலங்கையின் அரசமைப்பை மீறும் வகையில் எந்தவொரு நாட்டுடனும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதில்லை என்பதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. தேசிய பாதுகாப்பு, நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை என்பவற்றுக்கு அச்சுறுத்தலான உடன்படிக்கையில் கைச்சாத்திட மாட்டோம். ஒப்பந்தத்தை கிழிப்போம், வீசுவோம் என்றெல்லாம் இராஜதந்திர நடவடிக்கையின் போது சில்லறை அரசியல் நடத்த முடியாது. நிதானமாகவே விவகாரங்களைக் கையாளவேண்டும் - என்றார்.

(ப-44)

# போலி ஆவணங்களுடன் காணி விற்றவருக்கு சிறை

கொழும்பு, ஜூலை 3

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள காணியொன்றை, போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்தமை தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட ஐவருக்கு, 67 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க தீர்ப்பளித்தார்.

பிரதிவாதிகள் ஐவருக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதிகள் ஐவரும் இணைந்து குறித்த காணியின் உரிமையாளருக்கு ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

முதலாவது பிரதிவாதிக்கு 25 வருட சிறைத் தண்டனையும், இரண்டாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளுக்கு தலா 10 வருட கடூழிய சிறைத் தண்டனையும், நான்காவது பிரதிவாதிக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டி மெரயின் டிரைவ் வீதியிலுள்ள எலோயி மாவத்தையில் அமைந்துள்ள காணியொன்றுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி போலி ஆவணங்களை தயார் செய்து அதனை விற்பனை செய்தமை மற்றும் அதற்கு ஆதரவளித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் .இந்த பிரதிவாதிகள் ஐவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நீண்ட வழக்கு விசாரணைகளின்பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, ஐவரையும் குற்றவாளியாக அறிவித்து தீர்ப்பளித்தார்.

(ஐ)

# ஊர்வலம் சென்ற மணமக்களுக்கு

## 85,000 ரூபா தண்டம்

கொழும்பு, ஜூலை 3

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறி, பொலிஸாரின் உத்தரவை பொருட்படுத்தாமல் மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்த மணமக்களுக்கு 85,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தெல்தெனிய மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இவ்வாறு தண்டம் விதித்தது.

இந்த புதுமணத் தம்பதியினர் கண்டி - மஹியங்கனை ஏ26 வீதியில்ஹுன்னஸ்கிரியநகருக்கு அண்மையில் வீதி விதிகளை மீறும் வகையில், பொலிஸாரின் உத்தரவை பொருட்படுத்தாமல் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் குறித்த தம்பதியினரை கைதுசெய்துள்ளனர். தமது திருமண நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் இவ்வாறு ஊர்வலமாக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளதாகவும், இவ்விருவரும் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. வீதி விதிகளை மீறியமை தொடர்பாக அவர்கள் மீது எட்டுக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதை அடுத்தே மன்று 85,000 ரூபா தண்டம் விதித்தது.

(ப)




# கொரோனாவை அடையாளம் காண பி.சி.ஆர். தன்னியக்க உபகரணம்

கொழும்பு, ஜூலை 3

கொவிட் 19 ஐ விரைவாக அடையாளம் காண்பதற்கு முழுமையான பி.சி.ஆர். தன்னியக்க உபகரணம் ஒன்றை சர்வதேச றோட்டரிக் கழகம், அரச மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

பி.சி.ஆர். உபகரணம் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

முழுமையான தன்னியக்க புதிய பி.சி.ஆர். உபகரணத்தின் பெறுமதி இரண்டு கோடி இருபது இலட்ச ரூபாவாகும்.

இந்த உபகரணம் மூலம் ஆராய்ச்சிகளின்போது முகங்கொடுக்கும் மனிதவளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

விரைவாகவும், துல்லியமாகவும் மற்றும் செயற்திறனை அதிகரிக்கவும் இந்தப் புதிய உபகரணத்தின் மூலம் முடியும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் முகங்கொடுக்கக் கூடிய வேறு விதமான வைரஸையும் அடையாளம் காண்பதற்கு இந்த புதிய பி.சி.ஆர். உபகரணத்தை பயன்படுத்த முடியும்.

கொவிட் ஒழிப்புக்காக வைத்திய ஆய்வு உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு றோட்டரிக் கழகம் 12 கோடி ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

நிகழ்வில் சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் விசேட வைத்தியர் சஞ்சீவ முனசிங்ஹ, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க, வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார, றோட்டரி கழகத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளின் தலைவர் செபஸ்தியன் கருணாகரன், முன்னாள் தவிசாளர் கே.ஆர்.ரவீந்திரன், பரிந்துரைக்கப்பட்டுள்ள தவிசாளர் புபுது த சொய்சா உள்ளிட்ட பிரமுகர்கள் மற்றும் றோட்டரி கழகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# சமூக ஊடகங்களை கண்காணிக்கும் பவ்ரல்

கொழும்பு.ஜூலை 3

PAFFREL

சமூக ஊடகங்களில் தேர்தல் தொடர்பில் வெளியாகும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள், மத சமூக விடயங்களைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துதல் போன்றவற்றைக் கண்காணிப்பதற்கு தேர்தல் கண்காணிப்பாளர்களை நியமிப்பதற்கு பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது.

குறித்த கண்காணிப்புப் பணிகளுக்காக 3 ஆயிரம் பேர் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சமூக ஊடகப் பதிவுகளை ஆராய்ந்த பின்னர் அவற்றை தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்த பின்னர் அவை முகநூல் போன்ற உரிய நிறுவனங்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறான விடயங்கள் குறித்து துரித நடவடிக்கையை எடுப்பதற்கு முகநூல் இணங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(க)

# பரீட்சைத் திகதி இறுதி தீர்மானம் அடுத்த வாரம்

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உயர்தரப் பரீட்சை நடைபெறும் தினம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அடுத்த வாரத்துக்கு அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருடனான கலந்துரையாடலின் இந்த விடயம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

(க)

# அரசுக்கெதிராக தெற்கில் மக்கள் எழுச்சி உருவாகும்

## ஐ.ம.ச.ஆதரவு அணி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

**பயங்கரவாதி கருணா அம்மானுக்கும் அவரைப் பாதுகாக்கும் அரசுக்கும் எதிராக நாட்டு மக்களை ஒன்றுதிரட்டிக் கொழும்பில் மக்கள் எழுச்சியொன்றை உருவாக்கத் தாம் தயாராக உள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் புளத்கோபிட்டிய தொகுதி அமைப்பாளர் ஜகத் வின்னகொட விதான தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கருணா அம்மான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உப தலைவராக இரு தடவைகள் நியமிக்கப்பட்ட ஒருவர். தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டவர். இம்முறையும் தேசியப் பட்டியல் மூலம் மஹிந்தவால் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கத் தெரிவான போதிலும் அதனை மறுத்து தேர்தலில் குதித்துள்ளார். தமிழ் மக்களுடன் எமக்கு எவ்வித மோதலும் கிடையாது. ஆனால் இந்த கருணா அம்மான் மீண்டும் இந்தத் தமிழ் மக்களுக்கு என்ன கூற விழைகிறார் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இவ்விதம் இனவாதத்தைத் தூண்டி தமிழ் மக்களை மீண்டும் பயங்கரவாதச் சிந்தனைக்குள் சிக்க வைப்பது பாரதூரமான செயற்பாடாகும்.

அரசு இத்தகைய பயங்கரவாதியைப் பாதுகாக்க முயல்கிறது. எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திட மஹிந்த அரசு எடுத்துள்ள முயற்சிக்கு அரசில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் பொய்யாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இது நாட்டு மக்களை ஏமாற்றும் நடிப்பே. நாடாளுமன்ற உறுப்பினராவதன் மூலம் பணம் தேடிக் கொள்ளும் நடைமுறை முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். எமது கட்சி சார்பாக நாடாளுமன்றம் செல்வோர் இவ்வித நியாயமற்ற, மக்கள் விரோதச் செயற்பாடுகளை அறவே கைவிட்டு தம்மை உதாரண புருஷர்களாக மக்களுக்கு வெளிப்படுத்துவோம் - என்றார். (ப)



# 20 வருடங்களாக என்ன செய்தீர்கள்?

## சத்தியலிங்கம் கேள்வி

வவுனியா, ஜூலை 3

எங்களுடன் போட்டிக்கு வருபவர்கள் எம்மைக் குறை கூறுவதை விடுத்து தாங்கள் 20 வருடம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு என்ன செய்தோம் என்பதனை சொல்லட்டும் என முன்னாள் மாகாண அமைச்சரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளருமான ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இருபது வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தவர்கள் தற்போது வெளியில் ஓடிப்போய் நின்று கூட்டமைப்பு என்ன செய்தது என்று தங்களைத் தாங்களே கேட்கின்றனர். இது வெட்கப்படக்கூடிய விடயம். அரசாங்கக் கட்சிகளாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் போட்டிக்கு நிற்கும் ஏனைய கட்சிகளாக இருந்தாலும் சரி சுயேச்சைக்குழுக்களாக இருந்தாலும் சரி எல்லோரும் மக்களிடம் கேட்பதெல்லாம் கூட்டமைப்பு உங்களுக்கு என்ன செய்தது என்பதேயாகும். ஆனால் தாங்கள் என்ன செய்தோம் என்ன செய்யப்போகின்றோம் என்பதற்கான திட்டம் அவர்களிடம் இல்லை. அதைச்சொல்லி வாக்கு கேட்டால் மரியாதை கொடுக்கலாம். நாங்கள் என்ன செய்வோம் என மக்களுக்கு சொல்லுவோம். வட மாகாணசபையில் 4 வருடங்கள் அமைச்சராக இருந்தவன். அப்போது வடக்கு மாகாணம் முழுவதும் சுகாதாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பெரிய வேலைத்திட்டங்களை நாங்கள் செய்துள்ளோம். வவுனியா மாவட்டத்தில் 8 புதிய வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் இல்லாத பின்தங்கிய கிராமங்களாக இருந்த சேமமடு நவ்வி கண்ணாட்டி கணேசபுரம் கனகராயன்குளம், ஈச்சங்குளம் செட்டிகுளம் மற்றும் பெரியகுளத்தில் சித்த வைத்திய மருத்துவமனை சிங்கள மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. எங்களுடன் போட்டிக்கு வருபவர்கள் எம்மைக் குறைகூறுவதை விடுத்து தாங்கள் 20 வருடம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு என்ன செய்தோம் என்பதனைச் சொல்லட்டும் - என்றார். (ப-110)

# அரசியலில் பிரவேசிப்பதற்கு பெண்கள் விரும்புவதில்லை

## சேறுபூசுவதால் இந்த நிலை என்கிறார் மங்களேஸ்வரி

மட்டக்களப்பு, ஜூலை 3

நாட்டில் ஆண்களை விட பெண்கள்தான் அதிகமாக உள்ளனர். தொழிற்துறைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பெண்கள்தான் பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஆனால் அரசியலில் பெண்கள் மிகமிகக் குறைவு. இதற்கு எமது நாட்டு சேறுபூசும் அரசியலும் காரணம் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மாணிக்கப்போடி மங்களேஸ்வரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண்களுக்கு சமத்துவம் வழங்கப்பட வேண்டும். இன்று வீடுகளிலும், பல இடங்களிலும் பெண்களை அடிமையாகப் பார்க்கின்ற நிலையுள்ளது. அரசியலில் பெண்களின் பங்கு மிகக் குறைவு. ஆனால் முழு நாட்டில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக உள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர் தொகையின் அடிப்படையில், ஆண்களிலும் பார்க்க 21ஆயிரம் பெண் வாக்காளர்கள் மேலதிகமாக உள்ளனர். அவ்வாறு இருந்தும் சேறுபூசும் அரசியலால் பெண்கள் முன்வருவதற்கு தயங்குகின்றனர். அதேவேளை அடிமைத்தனத்தால் அரசியலில் உள்வாங்குவதும் மிகக்குறைவே. நான் அரசியலில் நுழைவதற்கு முன்னர், அரசியலில் இறங்கினால் சேறு பூசப்படுவாய் என பலர் கூறினர். அதனைத் தற்போது கண்ணூடாகக் காண்கின்றேன் - என்றார். (ப)



# ஐந்து வருடங்களில் 4 லட்சம் கைதுகள்!

கொழும்பு, ஜூலை 3

கடந்த 5 வருடங்களில் 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளதாவது:

2015 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில், இலங்கையில் 4 ஆயிரத்து 338 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 257 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 27 ஆயிரத்து 581 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அது தொடர்பாக 2 இலட்சத்து 52 ஆயிரத்து 259 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் ஆயிரத்து 828 கிலோ ஹொக்கைன் மீட்கப்பட்டுள்ளது. அவை தொடர்பில் 153 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டு முதல் இது வரையில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 61 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 161 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போதும் மேல் நீதிமன்றங்களில் போதைப்பொருள் தொடர்பான 582 வழக்குகள் நிலுவையில் உள்ளன- என்றார். (எ-ரி)

# சுயநல முஸ்லிம் அரசியல்வாதிகளின் பொய்ப் பிரசாரங்களை நம்பாதீர்கள்!

## மயோன் முஸ்தபா தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 3

தீவிர இனவாதம் கக்கும் பௌத்த தேரர்கள் எவரையும் பொதுஜன பெரமுன பொதுத்தேர்தல் வேட்பாளர்களாக நிறுத்தவில்லை ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று கடந்த ஆறு மாத காலத்தில் ஜனாதிபதி முஸ்லிம்களுக்கு எதிராக எத்தகைய பழிவாங்கல்களையும் முன்னெடுக்கவுமில்லை. எனவே இன்னும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் பொய்ப் பிரசாரங்களை எம் மக்கள் நம்பக்கூடாது.

இவ்வாறு முன்னாள் பிரதி உயர் கல்வி அமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலிலும், ஆட்சியிலும் நடுநிலைப் போக்குக்கொண்ட சிறந்த தலைவராக ஜனாதிபதி கோத்தபாய திகழ்கின்றார். . ஜனாதிபதி கோத்தபாய வெற்றிபெற்றால் முஸ்லிம்கள் பழிதீர்க்கப்படுவார்கள், பெரும் நெருக்கடிக்குள்ளாவார்கள் என்றெல்லாம் முஸ்லிம்கள் மத்தியில் அச்சமூட்டி செய்த பிரசாரங்கள் இன்று பொய்யாகியுள்ளன. ஜனாதிபதி பதவியேற்று ஆறு மாதங்களுக்கு மேல் கடந்தும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக எதுவும் நடக்கவில்லை. அவர் எந்த வகையிலும் நாட்டு முஸ்லிம் மக்களைப் புறக்கணிக்கவோ, முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கவோ முனையவில்லை என்பதை முஸ்லிம் மக்கள் உணர வேண்டும். மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக திலீப் நவாஸையும், முஸம்மிலையும், பொதுஜன பெரமுன முஸ்லிம் பிரிவின் தலைவராக சட்டத்தரணி அலிசப்ரியையும் மேலும் சில உயர் பதவிகளுக்கு முஸ்லிம்களை ஜனாதிபதி நியமித்துள்ளமையை நாம் மறைத்து விடலாமா?. அவர் இனவாதியாக அல்லது முஸ்லிம் எதிர்ப்பாளராக இருந்தால் இவற்றைச் செய்திருப்பாரா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ப-30)

ஊழலில் ஈடுபடும்

# பொலிஸாருக்கு மன்னிப்பில்லை:

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு



**கொழும்பு,ஜூலை 3**

**பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவில் ஊழலில் ஈடுபடும் எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் மன்னிப்பு வழங்கப் போவதில்லை என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.**

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் கடத்தல் காரர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் நான்கு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதனுடன் தொடர்புபட்ட மேலும் இருவர் தடுத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள னர்.

பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து போதைப்பொருள் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனங்கள், 3 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

அத்துடன், கையகப்படுத்தப்பட்ட காணி, தங்காபரணங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் குறித்தும் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 25 பேர் கொண்ட மூன்று குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் - என்றார்.(க)

## 6 குற்றச்சாட்டுக்களை மறுத்தார் சட்டத்தரணி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி மீது மது போதையில் வாகனம் செலுத்திய உள்ளிட்ட ஆறு குற்றசாட்டுக்களை பொலிஸார் முன் வைத்த நிலையில் அவற்றை சட்டத்தரணி மறுத்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, சந்தேகத்துக்கு இடமான முறையில் வந்த காரை மறித்துச் சோதனையிட முயன்றுள்ளனர். அதன் போது காரை நிறுத்தாது ஓட்டியவர் தொடர்ந்து ஓடிய போது பொலிஸார் காரைப் பின் தொடர்ந்து வழி மறித்தனர்.

அதன் போது காரின் சாரதி இருக்கையில் இருந்தவர் தன்னை சட்டத்தரணி என அறிமுகம் செய்துள்ளார். அதன் போது முகத் தோற்றளவில் அவர் மது போதையில் இருப்பதனை அறிந்து கொண்ட பொலிஸார் அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று வழக்குப் பதிவு செய்தனர்.

சாரதி அனுமதி பத்திரமின்றி சாரத்தியம், மது போதையில் சாரத்தியம், பொலிஸாரின் சமிக்சையை மீறியமை, ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றமை, ஊரடங்கை மீறியமை, முகக் கவசம் அணியாமை ஆகிய ஆறு குற்றச்சாட்டை முன் வைத்து வழக்குப் பதிவு செய்த பின்னர், அவரைப் பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.

குறித்த வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்ட போது, சந்தேக நபரான சட்டத்தரணி மன்றில் முன்னிலையானார். அதன் போது பொலிஸார் முன்வைத்த குற்றசாட்டுக்கள் ஒவ்வொன்றாக சந்தேகநபருக்கு மன்றினால் தனித்தனியே வாசித்துக் காட்டப்பட்டது.

சந்தேக நபரான சட்டத்தரணி அத்தனை குற்றசாட்டையும் மறுத்து தான் சுற்றவாளி என மன்றுரைத்தார். அதனைத் தொடர்ந்து சந்தேக நபரான சட்டத்தரணியை 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார். (க-26)



## 30 கிலோ கஞ்சா வல்வையில் மீட்பு

வடமராட்சி,ஜூலை 3

வல்வெட்டித்துறையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 30 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பற்றைக்குள் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, இராணுவ அதிரடிப்படையினருடன் இணைந்து தேடுதல் நடத்தப்பட்டது.

பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டது. எனினும் சந்தேகநபர்கள் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-108)

## கிராம அலுவருக்கு 1500 வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூலை 3

நாடளாவிய ரீதியில் கிராம அலுவலர்களுக்கான1500 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெற்றிடங்களுக்கு எதிர்வரும் நாள்களில் பரீட்சைகளை நடத்தி, தகுதி வாய்ந்தோரைத் தெரிவு செய்யவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

அவ்வாறு இல்லாவிட்டால், ஏற்கெனவே, நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை இணைத்துக் கொள்வதற்கு இயலும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொதுத்தேர்தலின் பின்னர் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

சட்டத்தரணி ஹிஸ்புல்லாஹ் விவகாரம்

# நீதிவானுக்கு வழங்கிய இரகசிய தகவல் கசிவு

கொழும்பு, ஜூலை 3

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில், நீதிமன்றுக்கு அளிக்கப்பட்ட இரகசிய வாக்குமூலங்களில் உள்ள விடயங்கள் ஊடகங்களுக்குக் கசிந்தது எவ்வாறு என சிறப்பு விசாரணைகளை நடத்துமாறு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார்.

குற்றவியல் சட்டத்தின் 127 ஆவது அத்தியாயம் பிரகாரம், இரு சிறுவர்கள் கடந்த மே 12 ஆம் திகதி, கோட்டை நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலம் அளித்தனர். அதன் பின்னர் அவ்வாக்கு மூலம் சீல் செய்யப்பட்டுப் பாது காப்பாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பின்னனியில், அவ் வாக்குமூலத்தில் கூறப்பட்டதாகத் தெரிவித்து சில விடயங்களை கடந்த மே 13 ஆம் திகதியன்று சில ஊடகங்களும், இரு தொலைக்காட்சிகளும் செய்திகளாக வெளியிட்டுள்ளன.

அதனைக் கருத்தில் கொண்டு, நீதிமன்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வது குறித்த பிரச்சினை ஏற்படுத்தியுள்ளது. அதனால் இது குறித்து உடன் விசாரணை தேவை. குற்றவியல் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட இரகசிய வாக்குமூலம் எவ்வாறு ஊடகங்களுக்குச் சென்றன என விசாரணை நடத்துமாறு மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுகின்றேன் என்று நீதிவான் திறந்த மன்றில் அறிவித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவிடுவதா இல்லையா என்ற நீதிமன்ற உத்தரவை எதிர்பார்த்து நேற்று முன்தினம் புதன்கிழமை அது குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சி.ஐ.டி.யினர் சார்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர்களான ரவீந்ர விமலசிறி, கருணாதிலக மற்றும் சுதத்குமார ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் சட்டத்தரணிகளான ஹபீல் பாரிஸ், சமிந்த அத்துகோரள, ரணிலா சேனாதீர, சஞ்சீவ, ஹசான் நவரத்ன பண்டார ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார முன்னிலையாகினர்.

இதன்போது நீதிமன்ற உத்தரவை அறிவித்த நீதிவான் ரங்க திஸாநாயக்க, பயங்கரவாத தடைச் சட்டம், அரசமைப்பின் 13 ஆம் உறுப்புரை, உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பு ஆகியவற்றை ஆராய்ந்து இந்த உத்தரவைப் பிறப்பிப்பதாக அறிவித்தார்.

இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 7(1), 7 (2) ஆம் பிரிவுகளை விஷேடமாக ஆராய்ந்த நீதிவான், அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அச்சட்டத்தில் 9 (1) ஆம் அத்தியாயத்துக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை, விசாரணையாளர்கள் சந்தேக நபராகக் கூட பெயரிடாத நிலையில், அவரை மன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவிட தனக்கு அதிகாரம் இல்லை என அறிவித்தார்.

இங்கு அடிப்படை உரிமை மீறல் குறித்த தெளிவான அவதானிப்பு இருப்பினும் கூட நீதிவான் எனும் வகையில் தனக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை மன்றில் முன்னிலைப்படுத்த கட்டளை பிறப்பிக்க சட்ட ரீதியிலான இயலுமை இல்லை என சுட்டிக்காட்டி, ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பிலான கோரிக்கையை நிராகரித்தார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார முன்வைத்த விஷேட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், நீதிமன்றுக்கு வழங்கப்பட்ட இரகசிய வாக்குமூலம் எப்படி ஊடகங்களுக்குச் சென்றது என விசாரிக்க கட்டளை பிறப்பித்து வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, சட்டத்தரணி ஹிஜாச் ஹிஸ்புல்லாஹ் கிங்ஸ்பரி குண்டுத் தாக்குதலுக்கு உதவியமை தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சகோதரர் பதியுதீன் மொஹம்மட் ரியாஸ் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மொஹம்மட் சைனாஸ், அவர் குறித்த விசாரணைகளின் சாட்சி சுருக்கக் கோவையை கோரினார். அதற்கும் நீதிமன்றம் அனுமதித்து அடுத்த தவணையில், சாட்சி சுருக்கத்தை மன்றுக்கு சமர்ப்பிக்க சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டது. (க)

# தமிழர் வரலாற்றுச் சொத்துக்களை நாமேதான் பாதுகாக்கவேண்டும்

## யாழ். மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

**எங்களுடைய வரலாற்று மரவுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கே உள்ளது என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் தெரிவித்தார்.**

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாத்தல் என்னும் பிரேரணையை யாழ்.மாநகர சபையில் முன்வைத்து அது தொடர்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தொல்லியல் திணைக்களத்தால் 13 அடையாளப்படுத்தப்பட்ட இடங்கள் உள்ளன. அவ் இடங்களில் மிக முக்கியமானது மந்திரி அரண்மனை. ஏனெனில், மந்திரிமனை என்பது தொல்லியல் சார்ந்த இடம் என்பதற்கு அப்பால் தமிழர்களின் இருப்பை அடையாளப்படுத்துகின்ற அல்லது ஆவணப்படுத்துகின்ற ஒரு மரவுரிமைச் சின்னமாகும். அவ்வாறான தமிழரின் மிக முக்கியமான இவ் மரிவுரிமைச் சின்னமானது தற்போது சமூக சீர்கேடுகள் நடைபெறுகின்ற இடமாகவும், கால்நடைகளைக் கட்டுகின்ற இடமாகவும் காணப்படுகின்றது. எமது பாரம்பரிய நிலங்களைத் தொல்லியல் சட்டங்கள் மூலம் பலவந்தமாகக் கையகப்படுத்துகின்ற தொல்லியல் திணைக்களமும் இதில் பாராமுகம் காட்டுகின்றது.

தொல்பொருள் திணைக்களமானது மந்திரிமனையை இன்னமும் அது ஒரு தொல்பொருள் சின்னமாக அறிவித்து அதனை பாதுகாக்காமைக்குரிய முக்கிய காரணம் மந்திரி மனை தமிழர்களின் பூர்வீக தன்னிகரற்ற இருப்பை பறைசாற்றுவதனால் தான்.

தொல்லியல் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களைப் பறித்தெடுத்து அதனை பௌத்தமயமாக்குதல் மற்றும் தமிழர்களின் இருப்பை பறைசாற்றுகின்ற மரவுரிமைச்சின்னங்களை அழித்தல் அழியவிடுதல் போன்ற செயற்பாடுகளை வடக்கு கிழக்கில் முன்னெடுத்து வருகின்றது என்பது வெளிப்படை. அதன் தொடர்ச்சி தான் இந்த நல்லூர் இராஜதானியின் மந்திரி அரண்மனையும்.

100 வருடங்களுக்கு மேற்பட்ட பொருள்களை தொல்பொருள் சட்டத்தின் கீழ் அதனை உள்வாங்குகின்ற தொல்பொருள் திணைக்களம் குறித்த அரண்மனையை உள்வாங்காமல் பாதுகாக்காமல் அழியவிடுவதற்கு காரணம் அது தமிழரின் மரவுரிமைச் சின்னம் என்ற ஒரே ஒரு காரணத்தினால் தான். ஒன்றை அழிப்பது மட்டும் தான் வன்முறை அல்ல. அதனை பாதுகாக்காமல் அழியவிடுவதும் வன்முறைதான். மந்திரிமனை போன்ற தமிழர்களின் மரவுரிமைச் சொத்துக்களை அழியவிடுவதும் ஒரு வன்முறை தான். அந்த வன்முறையை தொல்லியல் திணைக்களம் மேற்கொள்ளுகின்றது.

தொல்லியல் திணைக்களம் மந்திரிமனையைப் பாதுகாக்கவேண்டும் என்ற கடமையில் இருந்து விலகியிருக்கலாம்.

ஆனால் எங்களுடைய வரலாற்று மரவுரிமைச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கே உள்ளது. அந்த வகையில் இவ்வாறான மரவுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (ப)

## புலிகளின் துப்பாக்கிகள் வெல்லாவெளியில் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூலை 3

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள 40 ஆம் கிராம பிரதேசத்தில் ரி56 ரக துப்பாக்கிகள் இரண்டை விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணியில் நிலத்துக்கு வெளியே துப்பாக்கி தெரிந்ததைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் நீதிமன்ற உத்தரவுடன் அந்தப் நிலப்பகுதியை அகழ்ந்து சோதனையிட்டனர். உபயோகிக்க முடியாத நிலையில் இருந்தஇரு ரி56 ரக துப்பாக்கிக்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளால் உபயோகிக்கப்பட்டவையாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி1)

## பஞ்சவர்ணக் கிளிகளை வைத்திருந்தவர் கைது!



புத்தளம், ஜூலை 3

வீட்டில் வளர்ப்பதற்கு தடைசெய்யப்பட்ட பஞ்சவர்ணக்கிளியை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். புத்தளம் நாகவில்லு பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். பாலாவி விமானப்படை புலனாய்வுப் பிரிவினரினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் வைத்திருந்த கிளிகள் இலங்கையின் விசேட பிரிவுகளில் ஒன்றான அலெக்ஸாண்டர் பெர்ரட் வகைஎ்யச் சேர்ந்த 2 மாதக் கிளிக்குஞ்சுகள் என வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேகநபரை புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

தேர்தல் பரப்புரைக்கு

# எனது புகைப்படங்களை பயன்படுத்த வேண்டாம்

## ஜனாதிபதி கோத்தா உத்தரவு



கொழும்பு, ஜூலை 3

பொதுத்தேர்தலின் பிரசார நடவடிக்கைகளுக்காக தனது புகைப்படங்களை பயன்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். அதுபோன்று பாதுகாப்பு சேவைகள், அரச சேவைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் எவரும் அரசியல் பணிகளில் ஈடுபடக்கூடாது என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

'இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் புகைப்படங்களை பயன்படுத்துகின்ற னர் எனவும் இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளை சம்பந்தப்படுத்திக் கொள்கின்றனர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் தேர்தல் பிரசாரத்துக்கு ஜனாதிபதியின் புகைப்படத்தை பயன்படுத்த வேண்டாமென்றும்,அரச ஊழியர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென்றும் கடுமையாக அறிவுறுத்துமாறும் ஜனாதிபதி எனக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அரச ஊழியர்களும் இந்த அறிவுறுத்தலை பின்பற்றுமாறு ஆளுநர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட நிறுவனத் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதியொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ஐ)

## புறாப்பொறுக்கியில் சுப்பர் டீசல் நிலையம்

வடமராட்சி, ஜூலை 3

வடமராட்சியின் முதல் சுப்பர் டீசல் நிலையம் புறாப்பொறுக்கி எரிபொருள் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளரால் நிலையம் திறக்கப்பட்டது.

வல்லை வீதி புறாப்பொறுக்கியில் இயங்கும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுப்பர் டீசல் நிலையம் திறக்கப்பட்டது. வடமராட்சியில் இதுவரை சுப்பர் டீசல் நிலையம் இல்லை. சிறுப்பிட்டிக்கே இந்த எரிபொருளுக்காக மக்கள் செல்லும் நிலைமை இதுவரை காணப்பட்டது. (க-108)

# ஐ.சி.சியின் தலைவர் தேர்தலுக்கு சங்கக்கார போட்டியிட இயலாது!

## திலங்க சுமதிபால முட்டுக்கட்டை



கொழும்பு, ஜூலை 3

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் இம்முறை பங்கேற்க முடியாது என்று இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இது தொடர்பில் திலங்க சுமதிபால மேலும் தெரிவித்ததாவது:


'சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுவில் பங்கேற்காத ஒருவரால் இந்தத் தேர்தலில் போட்டியிட முடியாது. எனவே எனக்குத் தெரிந்த சட்டங்களுக்கு அமைய எதிர்வரும் சர்வதேச கிரிக்கெட் சபை தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி சங்கக்காரவிற்கு இல்லை' - என்றார். (ம)



# மன்னார் விரிகுடா, மன்னார் தீவு :

## சூழமைவும் பாதுகாப்பும்

3



ஆய்வாளர் சின்கிலேயர் பீற்றர்

**ஓர் ஆய்வு தொகுப்பு**

**2010** ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவை சேர்ந்த 'பிறிச்சிங் லங்கா' எனும் அரச சார்பற்ற தாபனம் மன்னார் நகரை அழகுபடுத்தும் முகமாக, அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் நகர சபை கமநல சேவை திணைக்களம் , ஸ்தாபனங்களுடன் இணைந்து 201ஆம் ஆண்டில் ஒரு திட்டம் ஒன்றை வகுத்து 6 மாதங்கள் மன்னாரிலுள்ள குளங்களை ஆய்வுசெய்து இதன் அறிக்கையை 2016ஆண்டில் மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளித்தனர். இதன் அடிப்படையில் அக்காலத்தில் குளங்களைப் பாவிப்பவர்கள் அதற்கு ஒரு புனைப்பெயரை வைத்திருந்தனர். ஆடை துவைப்பதற்கு உள்ள குளத்தை வண்ணார்குளம் என்றும், தாமரைகள் வளர்ந்துள்ள குளத்தை தாமரைக்குளம என்றும் பிள்ளையார் கோயில் குளத்தை பிள்ளையார்குளம் என்றும் கோரைகள் உள்ள குளத்தை கோரைக்குளம் என்றும் பெரிய கமத்தில் அமைந்துள்ள குளத்தை பெரியகமக்குளம் என்றும், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிராமத்தில் உள்ள குளத்தை மூர்வீதிக்குளம் என்றும் இலங்கை போக்குவரத்து சபை வாகனங்கள் கழுவும் குளத்தை CTB குளம் என்றும், கடல் சிப்பிகளை சூளை வைத்து எரித்து குளிரப்பண்ணும் இடத்தில் அமைந்துள்ள குளத்தை அட்டாளகுளம் என்றும், பள்ளிமுனை கிராமத்தில் அமைந்துள்ள குளத்தை பள்ளி முனைகுளம் என்றும் அழைத்தனர்.

2008ஆம் ஆணடிலிருந்து 2017ஆம் ஆண்டு வரை, 850 மில்லியன் ரூபா செலவில் UNPS ஸ்தாபனம் கீழ்கண்ட 8 குளங்களை நன்கு புனரமைத்து, வடிகாலமைப்புடன் சீர்செய்து அவற்றை மன்னார் நகரசபைக்கு 2017ஆம் ஆண்டில் கையளித்தனர். இவர்கள் நகரக்குளம் ( மக்கள் வங்கியின் பின்புறம்) கெம்பைக்குளம் (பழைய UNP காரியாலயம்), வட்டக்குளம் (அல்லஷார் பாடசாலை), உப்புக்குளம் (அம்மன் கோவில் அருகில்) சின்னாச்சிக்குளம் (BOC விடுதிக்கு பின்புறம்) தாமரைக்குளம் ( மன். புனித சவேரியரர் பெண் பாடசாலை அருகில்), நெடுங்குளம் (மன்.புனித ஆண்கள் பாடசாலை),அட்டால குளம்( சாவற்கட்டு). மேலும் 'பிறிச்சிங் லங்கா' தமது சொந்த செலவில் பெரியக்கமம்குளம், பள்ளி முனை பாலகுளம் போன்ற இரண்டையும் புனர் நிர்மாணம் செய்துள்ளார்கள். மேலும் வண்ணார்க் குளம் (புனித அந்தோனியார் தேவலாயம் பள்ளி முனை 03 ஏக்கர் விஸ்தரணம் உள்ளது). ஆத்தர் குளம் (சிறிய அத்தர்குளம்), செட்டியுத்து குளம்,கறுத்த வட்டக்குளம், எமில்நகர்குளம், பெரிய எமில்நகர்குளம் , எருமைக்குளம், தரவன்கோட்டை குளம் 05 ஏக்கர் விஸ்தரணம் கொண்டது. இது தற்போது சலவை தொழிலாளருக்கான புனரமைக் கப்பட்டுள்ளது. ஜயம் மோட்டைக்குளம் , களிக்க மோட்டை குளம்,100 ஏக்கர் விஸ்தரணத்தை கொண்ட கோறைகுளம்,சுகிர்தம் குளம் போன்ற 12 குளங்கள் கமநல சேவை திணைக்களக்கத்துக்குச் சொந்தமாக உள்ளது. மேலும் மேற்கூறிய சகல குளங்களும் இலங்கை வர்த்தகமானியில் குறிப்பிடப்பட்டு கமநல சேவை திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இக்குளங்களைப் பேணி பாதுகாப்பது அவ்வூர் மக்களின் கடமையாகும். 6 மாதங்களுக்கு மேல் நீர் தேங்கியுள்ள குளங்களில் நன்னீர் வாழ் மீன்களை வளர்ப்பதன் மூலம் நுளம்பு தொல்லையிலிருந்து காப்பாற்றுவதற்கும், உள்ளூர் தாராக்கள், இடம்பெயரும் வெளிநாட்டு பறவைகள் போன்றவற்றுக்கு ஏற்ற அமைவிடம் ஒன்றை அமைத்துக்கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

கடந்த 3 வருடங்களில் 1,000க்கு மேற்பட்ட உள்ளூர், வெளியூர் உல்லாசப் பயணிகள் மன்னார் தீவுக்கு வருகை தந்து இப்பறவைகளைப் பார்வையிட்டது, உல்லாச விடுதிகளில் தங்கும் பதிவேடுகளிலிருந்து தெரியவருகின்றது.

போரின் பின் 2012ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை 15 மேற்பட்ட உல்லாச விடுதிகள் மன்னார் தீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதற்கு ஒரு சான்றாகும்.

இதேபோன்று 2017ஆம் ஆண்டில் தலைமன்னார் கிராம கடற்கரையிலும், பேசாலை கடற்கரையிலும், கீரிக் கடற்கரையிலும், உல்லாசப்பிரயாணிகளை கவரும் முகமாக 35 ஏக்கர் இடப்பரப்பு துப்பரவு செய்யப்பட்டு மின்சார வெளிச்சங்கள், மலசலக்கூடங்கள் போன்ற அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் அவ்வூர் பொதுமக்கள், பிரதேச சபையினர் இவற்றைப் பராமரிப்பது வெகுகுறைவு. போர்த்துக்கீசர் காலம் தொடக்கம் பல கிறிஸ்தவ கோயில்களும், பாடசாலைகளும் தீவில் அமைக் கப்பட்டுள்ளன. இத்துடன் இந்துக்கோயில்களும், மசூதிகளும் இங்கு வாழும் நம்பிக்கையை அடுத்து கட்டப்பட்டுள்ளது. பல மில்லியன் பனைமரங்களும், பல இலட்சம் தென்னை மரங்களும், மர முந்திரிகை மரங்களும், பல கோடி உடைமரங்களும் பல கோடி கண்டல் மரங்களும், பல கோடி ஆயுர்வேத மூலிகைச்செடிக ளும் மன்னார் தீவிலும், குடா கரை ஓரத்திலும் செழித்து வளர்ந்துள்ளது காணக்கூடியதாகவுள்ளது. மேலும் மன்னார் தீவிலுள்ள 62வீத மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். இவர்களில் 40வீதம் மாத்திரம் பெரும் வள்ளங்கள், பிளாஸ்ரிக் வள்ளங்கள், குல்லாக்கள் போன்றவற்றைப் பாவிக்கின்றனர். ஏனைய 20வீதமானோர் 1000 மீற்றர் கடல் தூரத்தில் சிறு வலை மூலமும், தூண்டில் மூலமும், குல்லா வள்ளத்தின் மூலமும், மீன்பிடித்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு செல்கின்றனர். மேலும் சிலர் நவீன முறையில் கடலட்டை, கடல் சிப்பிகள் போன்றவற்றை பெருமளவில் பிடிக்கின்றனர். தற்போது ஒரு நாளில் சுமார் 812 கொள்கலங்களின் மீன்கள் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. இருப்பினும் 1985ஆம் தொடக்கம் இன்றுவரை எமது மீனவர்கள் தொழில்நுட்ப உபகரணங்கள் போன்றவற்றை பெருந்தொகையில் மூலதனம் செய்யாமல் சுமார் 40வீதம் கடல் வளங்களை பெறுகின்றனர். மேலும் இந்திய மீனவர்கள் ஒரு கிழமையில் 3 நாள்கள் 200-300 பெரும் படகுகள் மூலம் மன்னார் குடாவுக்கு உட்பிரவேசித்து கடல் வளங்களைச் சூறையாடி செல்வது சர்வதேசத்துக்கும் தெரிந்தவையாகும். இந்தியாவும், இலங்கையும் இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கவிட்டால் எமது மன்னார் விரிகுடா, பாக்கு நீரிணை போன்றன கடல்வளம் குன்றிய பிரதேசமாக மாறக்கூடிய பயங்கர சூழ்நிலை ஒன்று எதிர்காலத்தில் நிலவும்.

கடந்த 2017ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி மன்னார் தீவில் மாத்திரம் 15,340 குடும்பங்களில் 62,700 மக்கள் செறிந்து ஜீவிப்பதாகத் தெரியவருகின்றது. அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் பின் 30வீதம் கட்டடங்கள் மாடி வீடுகளாக மாறி மன்னார் தீவை அழகுப்படுத்துகின்றன. இடப்பெயர்ந்த முஸ்லிம் வர்த்தகர்கள் 2010ஆம் ஆண்டின் பின் வருகை தந்ததினால் வர்த்தகம் 70வீதம் வளர்ச்சிக்கண்டுள்ளது. இத்தீவில் 57.48வீதம் கிறிஸ்தவர்களும், 23.69வீதம் இந்து மக்களும் ,16.71வீதம் இஸ்லாமிய மக்களும், 2.09வீதம் பௌத்த மக்களும் (அரச ஊழியர் பலர்) ஏனையோர் 0.03வீதம் இன ஐக்கியத்துடன் வாழ்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

மன்னார் வளைகுடா தொல்பொருள் ஆராய்ச்சி மன்னார் தீவின் வளைகுடாவில் ஜீராஸிக்காலத்தில் போது ஒரே திரளான நிலம் விளங்கியதாக வும், விலங்குகளின் புதை படிவங்கள், கடல் பூச்சுகள் ,முருகைக்கற்கள் , நத்தைகள், மீன்கள், ஊர்ந்து செல்லும் விலங்குகள் மற்றும் கடல்வாழ் முலையூட்டிகள் என்பவற்றின் எச்சங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இவை உச்சாமுனை, காரைதீவு (கற்பிட்டி பிரதேச அறுவக்காடு வனத்தீவில் பிரதேசம்), கல்லாற்றுப்படுக்கை ( முசலிப் பிரதேச பலுகஹாத்துறை) மற்றும், குதிரை மலை, வில்பத்து தேசிய பூங்கா, மேலும் மன்னார் தீவின் இரு மருங்கிலும் காணக்கூடியதாக உள்ளது. அறுவக்காடு, குதிரைமலை, கொம்பறிப்பு, வில்பத்து போன்றவற்றில் காணப்படும்.

உயிர் மூல வாழிடங்கள் ஆதாம் காலத்தின் ஊடாக மன்னார் தீவு வரை காணப்படுவது சிறப்பம்சமாகும். சிலாவத்துறை மற்றும் முத்தரிப்பு துறையில் காணப்படும் சிப்பிக்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் திருக்கேதீஸ்வரத்தை அண்டிய பகுதியிலுள்ள மாந்தை கோட்டை, அநுராதபுரத்தில் ஆட்சி செய்ய மன்னனின் கல்வெட்டுக்களில் காணப்பட்டது. இவை அக்காலத்தின் வர்த்தகம், கலாசாரத்தை காட்டுகின்றன. அநுராதபுரத்துக்குச் சொந்தமான பல்வேறு புத்த, இந்து ஆண் துறவிகள் மடங்களும், கற்பிட்டி வனத்த வில்லு, மாந்தை மேற்கில் காணப்படுகின்றன. அரேபிய வர்த்தகர்கள் புராதன கடல் மூலமாக வருகை தந்து பின்பு அங்கிருந்து ஒட்டகங்கள், கழுதைகள் போன்றவற்றில் பயணித்து மன்னார் தீவு தலை மன்னார் வரை பிரயாணம் செய்து பின் கடல் மூலமாக இந்தியா சென்றனர் என சான்றுகள் பகருகின்றன.

*(மிகுதி நாளை)*



# நாகம் பூசித்த நயினை நாகபூசணி

**வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினை நாகபூணி அம்மனுக்கு இன்று இரதோற்சவம் நடைபெறுவதையொட்டி, இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

நயினை விசு- இராசநாயகம்
தாதிய உத்தியோகத்தர்
பிரதேச வைத்தியசாலை,
நயினாதீவு.

வட இலங்கையில் வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பையும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பெற்ற சப்ததீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பதியே நயினையம்பதியாகும். சக்திபீடங்கள் அறுபத்தி நான்கினுள் புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் தனிச் சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிரகத்தின் தோற்றமும் அதன் வரலாறும் இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகக் காணப்படுகிறது.

நயினை நாகபூசணி அம்மனின் அருளாசி தனிச் சிறப்பானது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ நற்கருமங்களின் பொருள் பேசுவது. நம்பிக்கையுடன் வழிபாடு செய்யும் அடியவர்களது நோய்நொடிகள், அத்தனையும் நீக்கி அருளும் சக்தியாகவும் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு அளிக்கின்ற பேரருள் சக்தியாகவும் அன்னை நாகபூசணி அருளாசி புரிகின்றாள். அன்னையின் ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரம் கொண்டது. அலைகடல் தாண்டி ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் பக்தியின் பரவசத்தை உவந்தளிக்கிறது.

**நாகபூசணி என்ற பெயர் ஏன்?**

நயினாதீவுக்கு அண்மித்ததாக அனலைதீவு என்னும் ஓர் அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறிய தீவு அமைந்துள்ளது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து கடல்வழியாக ஒரு நாகபாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்மனை வழிபாடு செய்ததாக ஒரு ஐதீகமுண்டு. இவ்வாறு நாகம் வந்து பூசித்தமையால் நாகபூசணி எனப் பெயர் வரக் காரணமாயிற்று.

**கருடன் கல் வரலாறு**

ஆலய வரலாற்றுச் சின்னமாக பாம்பு சுற்றிய கல், கருடம் கல் என்பன பாதுகாக்கப்படுகின்றன. ஒரு கல்லை பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல்லை கருடன் கல் எனவும் பக்தர்கள் அழைப்பர். அனலைதீவுப் பகுதியில் இருந்து நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்த வேளை கருடன் அதை இடைமறித்ததாகவும் பாம்பு அருகில் இருந்த கல்லில் சுற்றிக் கொண்டதாகவும், கருடன் அருகில் இருந்த மற்றைய கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் அவ்வேளையில் படகு மூலம் வியாபார நோக்குக்காக வந்த வணிகச் செட்டியார் அம்பாளை நோக்கி மனமுருகி வழிபாடுசெய்ய கருடன் அவ்விடத்தைவிட்டு அகன்று செல்ல நாகம் பின்பு பூக்கொண்டு சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. மஹோற்சவத்தின் பதினொராம் திருவிழாவின் போது இந்தக் கற்களுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

> **அனலைதீவுப் பகுதியில் இருந்து நாகபாம்பு அம்மனுக்கு பூக்கொண்டு வந்த வேளை கருடன் அதை இடைமறித்ததாகவும் பாம்பு அருகில் இருந்த கல்லில் சுற்றிக் கொண்டதாகவும், கருடன் அருகில் இருந்த மற்றைய கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் அவ்வேளையில் படகு மூலம் வியாபார நோக்குக்காக வந்த வணிகச் செட்டியார் அம்பாளை நோக்கி மனமுருகி வழிபாடு செய்ய கருடன் அவ்விடத்தைவிட்டு அகன்று செல்ல நாகம் பின்பு பூக்கொண்டு சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.**

**அன்னையின் அருளாசி**

இவ்வாலயம் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பக்தர்கள் வந்து கூடுகின்ற தலமாகக் காணப்படுகிறது. இவ்வாலயத்தில் பக்தர்கள் தங்கிநின்று நாகதோச நிவர்த்தி, ஏனைய பரிகாரக் கிரியைகள் செய்து வருகிறார்கள். பௌர்ணமி தினங்களில் ஸ்ரீ சக்கர பூசை சிறப்பாக நடைபெறுகிறது. திருமணமான பெண்கள் தாலிபாக்கியம் நிலைக்கவும் திருமணமாகாத பெண்கள் நல்திருமணபாக்கியம் கிடைக்கவும் அம்பிகையை வேண்டி வழிபாடுசெய்கிறார்கள். ஆலய காரியாலயத்தில் ரூபா ஐயாயிரம் மட்டும் செலுத்தினால் குடும்பத்தாரின் பிறந்தநாள், திருமணநாள், தந்தை தாய் நினைவு நாள் போன்ற தினங்களில் அவர்களது பெயரால் பூசை வழிபாடுகள் செய்யப்பட்டு அன்னதானமும் வழங்கப்படுகிறது. அவர்களது உள்நாடு, வெளிநாடு போன்ற இடங்களுக்கு விபூதி பிரசாதம் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இப்படியான நல் சேவையை வழங்கிவரும் ஆலய அறங்காவலர் சபையின் சிந்தனை என்றுமே பாராட்டப்பட வேண்டியது. நாகசாந்தி, நாகப்பிரதிட்சை, முடியிறக்குதல், அன்னம் ஊட்டுதல், விற்று வாங்குதல், பௌர்ணமி தினங்களில் ஸ்ரீ சக்கரபூசை, நித்திய அன்னதானம் வழங்கல்என்பன நயினை நாகபூஷணி ஆலயத்தின் சிறப்புக்களாக உள்ளன. இம்முறை கொரோனாப் பேரிடர் காரணமாக மஹோற்சவத்தின் போது அமுதசுரபி அன்னதான சபை பகல், இரவு அமுதளிக்கும் சேவையை இடைநிறுத்தியது. அத்தோடு தாகசாந்தி நிலையங்கள், அபிவிருத்திச் சபை, தொண்டர் சபை, சாரணர் படை, கடல்பாதுகாப்புச் சேவை, உற்சவகால வைத்திய பணிமனை போன்றன இடம்பெறாமல் போயுள்ளன.


உலகம் முழுவதும் உலுக்கிக் கொண்டிருக்கும் கொடிய கொரோனா நோயால் இலங்கைத் திருநாட்டில் உள்ள அம்பிகை அடியார்கள் பலர் புலம்பெயர் அம்பிகை அடியவர்கள் பலர் வந்து வழிபாடுசெய்ய முடியாமல் அங்கிருந்தே உபவாசம் செய்கின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

எமது நாட்டிலும் உலகெங்கும் காணப்படும் கொடிய கொரோனா நீங்கிட எல்லாம் வல்ல மகாசக்தி நயினை நாகபூசணித் தாயை மனமுருகிப் பிரார்த்திப்போமாக.

யாழ்.மாநகரப் பகுதியில்

# ஆறு மாதங்களில் 224 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 3



**யாழ்.மாநகர பிரதேசத்தில் இந்த ஆண்டின் 6 மாத காலப்பகுதி யில் மட்டும் 224 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் இதன் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது.
அந்த மாதத்தில் மட்டும் 184 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவு புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.
டெங்கு தொடர்பான விழிப்புணர்வு சுகாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளது.
இந்த புள்ளிவிவரத் தகவலின்படி ஜனவரி மாதம் 184 பேரும், பெப்ரவரி மாதம் 20 பேரும், மார்ச் மாதம் மூன்று பேரும், ஏப்ரல் மாதம் ஒருவரும், மே மாதம் 10 பேரும், ஜூன் மாதம் ஆறு பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
தாக்கம் காணப்படும் இடங்களில் சுகாதார மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



சிறப்பாக நடைபெற்ற

# மன்னார் மருதமடு ஆலய ஆடி மாதத் திருவிழா

மன்னார், ஜூலை 3
மன்னார் மருதமடுத் திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா திருப்பலி நேற்று வியாழக்கிழமைகாலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.
கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் நவ நாள் ஆராதனை, திருப்பலிகள் என்பன இடம்பெற்றன.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றது.
அதனைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி கரல்ட் அன்ரனி பெரேரா, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர்.
திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடுஅன்னையின் ஆசிர் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.
திருவிழாவில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் கலந்து கொண்டிருந்தனர்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (ஐ-56)

# குளவி கொட்டி 13 பேர் பாதிப்பு

ஹற்றன், ஜூலை 3
குளவிக்கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர்கள் 13 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்டுமஸ்கெலியா தோட்டத்தின் லங்காபிரிவில் நேற்று இடம்பெற்றுள்ளது.
கொழுந்து பறிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தோட்டத்தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.
பாதிக்கப்பட்ட அனைவரும் மஸ்கெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
8 பேர் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், ஏனைய 5 பேரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெங்காயப் பயிரில் தாள்கோதிப் புழு

யாழ்ப்பாணம்,ஜூலை 3
யாழ்.குடாநாட்டில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிரில் தாள்கோதிப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது.
வடமராட்சி மற்றும் தெல்லிப்பழை பிர தேசங்களில் உள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட சின்ன வெங்காயப் பயிரில் தாள் கோதிப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஏனைய இடங்களில் தாள்கோதிப் புழுவின் தாக்கம் மிக மிகக் குறைவாகக் காணப்படுகிறது. செய்கையாளர்கள் அதற்கான மருந்தை விசிறி கட்டுப்படுத்தி வருகின்றனர். (க-17)

# கல்வியங்காடு சந்தை அகலிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
கல்வியங்காடு மீன் சந்தையை அகலமாக்கி விஸ்தரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீன் சந்தையில் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
தற்போதைய சூழ்நிலையில் தனிநபர் இடைவெளியைப் பேணும் பொருட்டு அநேகமான வியாபாரிகள் வீதியோரங்களில் வைத்து மீன்களை விற்பனை செய்து வருகின்றனர். வீதியோரத்தில் மீன்களை வைத்து விற்பனை செய்வதால் போக்குவரத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
இதனை அடுத்து மாநகர சபை, மீன் சந்தை வளாகத்தை அகலமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் மீன் மற்றும் மரக்கறி சந்தைக் கட்டடங்களுக்கு இடைப்பட்ட பகுதிக்கு கூரை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (க-17)



# தொல்பொருள் தூபிக்கு சாவகச்சேரியில் அடிக்கல்

சோழர் காலத்து சிவ ஆலயம் அமைந்திருந்த இடம் ஒன்று சாவகச்சேரியில் கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடத்தில் தொல்பொருள் நினைவுத் தூபி அமைக்கப்படவுள்ளது.
இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகாமையில் காலை 7 மணியளவில் நடைபெற்றது.
நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் தென்மராட்சி கிளைத் தலைவருமான கேசவன் சயந்தன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், உபதவிசாளர் பாலமயூரன், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
சோழர்காலத்தில் பிரமாண்டமான சிவ ஆலயமாக விளங்கிய அமிர்த பாசினி அம்பாள் வாரிவனேஸ்வரர் ஆலயம் போத்துக்கீசரால் அழிக்கப்பட்டதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. (ஐ-159)

# ஆழ்துளைக் கிணறு கையளிப்பு

வவுனியா, ஜூலை 3
40 குடும்பங்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான ஈஸ்வரிபுரத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
இதற்கான நிதியுதவியை வயாவிளானை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சமூக ஆர்வலர் கதிரடித்தம்பி சுப்பிரமணியம் வழங்கியிருந்தார்.
குறித்த கிணறு மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. (ஐ-110)



### கரவெட்டிப் பகுதியில்

# சுகாதார விதிமுறைகள் மீறல்: திருமண மண்டபத்துக்கு பூட்டு

வடமராட்சி, ஜூலை 3
கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத திருமண மண்டபத்தை 14 நாள்கள் மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருமண மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிப்பது இல்லை என முறைப்பாடுகள் கிடைத்தமையால் நேற்றுமுன்தினம் நிகழ்வு நடைபெறுவதை அறிந்த சுகாதார திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்றபோது, தனிநபர் இடைவெளி பேணாத நிலையில் மக்கள் காணப்பட்டனர். இது தொடர்பாக மண்டப உரிமையாளருக்கு அறிவுறுத்தல்களையும் எச்சரிக்கையையும் விடுத்து, மண்டபத்தை 14 நாள்கள் மூடுமாறு உத்தரவிட்டனர். (க-9)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு கடந்த 25 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலக இணையத் தளத்திலும் பட்டியலைப் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து, தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தேர்தல் வன்முறைகள் பெரியளவில் இல்லை!

'பவ்ரல்' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3
பெரிய தேர்தல் வன்முறைகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. இருந்தபோதும் எதிர்வரும் தினங்களில் அந்தந்த கட்சிகளின் வேட்பாளர்களுக்கிடையில் விருப்பு வாக்குப் போட்டி தீவிரமடையும் நிலை இருக்கின்றது. இது தொடர்பாக முதன்மை அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

9ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை மார்ச் மாதம் முதல் ஓகஸ்ட் 3 ஆம் திகதிவரை தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் இந்தக் காலப்பகுதியில் இருந்து இதுவரை பெரியளவில் தேர்தல் வன்முறைகள் எதுவும் பதிவாகவில்லை. கொவிட் -19 தொற்று நிலைமையில் இருந்து நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்த கடந்த மாதம் 15ஆம் திகதியில் இருந்து. ஜூலை முதலாம் திகதிவரை 229 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

PAFFREL

அதில் 114 சம்பவங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த முறைப்பாடுகளில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும், சட்டவிரோத தேர்தல் பிரசார சம்பவங்கள் தொடர்பில் 132 முறைப்பாடுகளும், பொதுச் சொத்துக்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை தொடர்பில் 17 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் அதிகமானவை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவில் அரசியல் தலையீடு இடம்பெறுகின்றமை தொடர்பிலாகும். இதுவரை பெரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன என முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. இருந்தபோதும் எதிர்வரும் தினங்களில் அந்தந்த கட்சிகளின் வேட்பாளர்களுக்கிடையில் விருப்புவாக்கு போட்டி தீவிரமடையும் நிலை இருக்கின்றது. இது தொடர்பாக பிரதான அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும். - என்றார். (ஐ)

## 24 நாள்களில் 46,000 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 3
நாடளாவிய ரீதியில் கடந்த 24 நாள்களாக பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து முன்னெடுத்துவரும் விசேட சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 46 ஆயிரத்து 617 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம், மற்றும் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அதற்கமைய கடந்த மாதம் 6ஆம் திகதி காலை ஆறு மணிமுதல் நேற்று நள்ளிரவு 12 மணிவரை சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டபோதே, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பில் 10 ஆயிரத்து 968 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், சட்டவிரோத மதுபானம் தொடர்பில் 9 ஆயிரத்து 198 சந்தேக நபர்களும், சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 99 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பல்வேறு குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 9 ஆயிரத்து 77 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கண்ட குற்றச் செயல்களுக்குள் உள்ளடங்காத வேறு வகையான குற்றச்செயல்களை புரிந்தமை தொடர்பிலும் 17 ஆயிரத்து 275 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதன் நோக்கிலே பொலிஸார் இந்த விசேட சுற்றிவளைப்பை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி2)



## இன்றைய நாள்



**மேடம்:** சவால்களை எதிர்கொண்டு கடுமையாக உழைத்து வெற்றி காண்பீர்கள். பெண்கள் பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. குடும்பத்தினரிடையே நல்ல பெயர் எடுப்பீர்கள்.



**இடபம்:** மற்றவர்களை குறை கூறாமல் அவர்களிடம் உள்ள நிறையை பார்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாள்களின் அதிருப்திக்கு உள்ளாவீர்கள்.



**மிதுனம்:** மனத் தைரியம் அதிகரிக்கும். திட்டமிட்ட சுபநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். உத்யோகத்தில் இருக்கும் தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்.



**கடகம்:** பெற்றோருக்கு இருந்து வந்த மருத்துவ செலவுகள் குறையும். வியாபாரத்தில் பிரச்சினைகள் தீரும். அலுவலக நண்பர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.



**சிம்மம்:** அலுவலகத்தில் சவாலான வேலைகளை சிரமப்பட்டு முடிப்பீர்கள். தாயார் மூலம் நன்மைகள் உண்டு. மகனின் திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.



**கன்னி:** விரும்பிய பொருள்களை வாங்குதில் சிறு மனக்குறை இருக்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.



**துலாம்:** எதிர்கால நலனுக்காக திட்டமிடுவீர்கள். குடும்பச் செலவுகள் சற்று அதிகரிக்கும். திடீர் பயணங்களால் அலைச்சல் கூடும். அலுவலக நண்பர்களால் சில பிரச்னைகளை சந்திக்க நேரிடலாம்.



**விருச்சிகம்:** அலுவலகத்தில் உள்ள பிரச்சினைகளை சமாளிக்கும் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வீடு, வாகனத்தை சீர்செய்வீர்கள்.



**தனுசு:** கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பெண்களுக்குத் திடீர் பணவரவு உண்டு. அலுவலகத்தில் சில புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.



**மகரம்:** சுகாதாரமற்ற உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். பெண்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்.



**கும்பம்:** பிள்ளைகள் உங்களின் அருமையை புரிந்து கொள்வார்கள். மனைவி விரும்பிய பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள்.



**மீனம்:** பூர்வ சொத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர்.

# 1, 2 ஆம் தரங்கள், முன்பள்ளிகள் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பம்

**கொழும்பு, ஜூலை 3**

**நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் முதலாம், இரண்டாம் தரங்கள் மற்றும் பாலர் பாடசாலைகளின் கற்பித்தல் செயற்பாடுகள் எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.**

ஏனைய தரங்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்க திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் முதலாம் மற்றும் இரண்டாம் தர மாணவர்கள் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் திகதி தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. இந்நிலையில், அதற்கான திகதி தற்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலுக்கமைய அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போலித் தேசியம் பேசுகிறதாம்

*கண்டுபிடித்தது பிள்ளையான் அணி*

மட்டக்களப்பு, ஜூலை 3

தமிழ் மக்களிடம் தற்போது எஞ்சியுள்ள பொருளாதாரம், நிதி மற்றும் நிர்வாகத்தை மாற்றானிடம் அடைவு வைக்கும் நோக்குடன் போலித் தேசியம் பேசிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் புறப்பட்டுவிட்டது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

மாற்று அரசியல் தலைமைகள் தாங்கள் சார்ந்த சமூகத்துக்காக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நான்கு வருடங்கள் எதுவும் செய்யவில்லை. நான்கு வருடங்கள் மாகாணசபை அதிகாரத்தைப் பெற்ற நாங்கள் தலைவர் சந்திரகாந்தனை முதலமைச்சராக்கி பட்டி தொட்டியென கிழக்கு மாகாணம் முழுவதும் ஏராளமான அபிவிருத்திகளைச் செய்துள்ளோம். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 40 வருடங்கள் ஏமாற்றிய அரசியல் தலைமைக்கா? அல்லது நான்கு வருடங்கள் அபிவிருத்தி செய்த அரசியல் தலைமைக்கா? வாக்களிக்கப் போகிறீர்கள் என்பதனைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். மாற்றுச் சமூகத்திடம் மண்டியிட வைக்காத, மக்களை நேசிக்கின்ற தனித்துவமான மக்களுக்காகத் தங்களை ஆகுதிகளாக்கத் துணிந்த தலைமைத்துவம் சந்திரகாந்தன் என்பதனை மட்டக்களப்பு சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. நடைபெறவுள்ள தேர்தல் 40 வருட போலிகளைக் களையெடுக்கின்ற தேர்தலாக அமைய வேண்டும். நாற்பது வருடங்களாகப் போலி வீரப் பேச்சுக்களைக் கேட்டு வாக்களித்து ஏமாந்துள்ள மக்கள் உண்மையான தலைமையைச் சந்திக்கவுள்ளனர் - என்றார். (ப)

## மீசாலை சந்தியில் இருவர் அட்டகாசம்

சாவகச்சேரி, ஜூலை 3

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மீசாலை சந்தியில் பெரும் அட்டகாசம் புரிந்தமையால், சுமார் அரை மணிநேரம் அங்கு பதற்றநிலை காணப்பட்டதென மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5.45 மணியளவில் நடந்துள்ளது.

மீசாலைச் சந்தியில் இருவர் மோட்டார் சைக்கிளில் சுழன்றடிக்கும் சாகசத்தைக் காட்டி அவ்வழியே வந்த வாகனங்களின் கண்ணாடிகளை அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் போன்றவற்றின் கண்ணாடிகளை கைகளால் அடித்து சேதப்படுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட போதும், அவர்கள் வருவதற்குள் அட்டகாசம் புரிந்தவர்கள் தப்பியோடியுள்ளனர். சம்பவத்தில் தூர இடங்களிலிருந்து வேலை முடிந்து வந்த அலுவலர்கள் பலரின் மோட்டார் சைக்கிள் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அட்டகாசம் புரிந்தவர்கள் மதுபோதையில் காணப்பட்டமையால் எவரும் தடுக்க முன்வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## நல்லை ஆதீனத்தில் ஆசி பெற்றார் சஜித்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணத்திலுள்ள நல்லை ஆதீன குரு முதல்வரை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்று காலை சந்தித்து ஆசி பெற்றார்.

யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பரப்புரைக்காக வருகை தந்துள்ள சஜித் பிரேமதாஸ நேற்றுக் காலை நல்லூர் ஆலய வீதியில் உள்ள நல்லை ஆதீனத்துக்குச் சென்றிருந்தார்.

அங்கு நல்லை ஆதீன குருமுதல்வரிடம் ஆசியைப் பெற்றதுடன் அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்பபாண கிளிநொச்சி பிரதான வேட்பாளர் கணேஷ் வேலாயுதம்,உமாசந்திர பிரகாஷ்,கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-20)

## ஆயுதங்களுடன் பெண் கைது!

கொழும்பு, ஜூலை 3

பெருந்தொகையான ஆயுதங்களுடன் பெண்ணொருவர் ஹோமாகம பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். ஹோமாகம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிட்டிபன சில்வர்ஸ்டர்வத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றின் இரகசிய அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன. 7 கைக்குண்டுகள், துப்பாக்கி, அதற்கான 4 ரவைகள், குண்டு துளைக்காத கவசங்கள் இரண்டு மற்றும் 9 மில்லி மீற்றர் ரகத்தைச் சேர்ந்த 77 ரவைகள் மற்றும் இனங்காணப்படாத 4 ரவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-ரி1)



## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்ப்பாணம் கச்சேரி- நல்லூர் வீதியில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கிட்டு பூங்காவில் இருந்து கச்சேரி நோக்கி வந்த வங்கி முகாமையாளர் ஒருவரின் கார் நாவலர் வீதியும் கச்சேரி நல்லூர் வீதியும் சந்திக்கும் சந்தியால் வீதியைக் கடக்க முற்பட்ட போது, மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும், பிள்ளையும் தூக்கி வீசப்பட்டுள்ளனர். கார் வீதியோரமாக உள்ள தொலைத்தொடர்புக் கம்பத்துடன் மோதியுள்ளது. காயமடைந்தவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-20)

## சிறப்பாக நடைபெற்ற வேட்டைத் திருவிழா

முல்லைத்தீவு, ஜூலை 3

வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான் தோன்றீச்சரம் ஆலயத்தின் வேட்டைத் திருவிழா நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. 13ஆம் திருவிழாவான வேட்டைத் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அடியார்கள் இலைகளை ஆடையாக அணிந்து கரி பூசி வேட்டைக்குச் சென்று வருவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு சுகாதார நடைமுறைக்கு அமைவாக குறைந்த அடியார்களுடன் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. (ஐ)





## 98ஆவது அனைத்துலக கூட்டுறவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

98 ஆவது அனைத்துலக கூட்டுறவு தினம் நாளை சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. கொவிட்- 19 தொற்றுக் காரணமாக கடந்த காலங்களைப் போன்று பெரிய அளவில் இந்த நிகழ்வை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும் நாளைய தினம் காலை 9 மணிக்கு சங்கத்தின் தலைவர், பணிப்பாளர், பணியாளர் மற்றும் கூட்டுறவாளர்கள் இணைந்து சங்க மண்டபத்தில் கூட்டுறவு கொடியை ஏற்றி, கூட்டுறவுக் கீதம் இசைத்து கூட்டுறவு தினத்தை நினைவு கூருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சுமந்திரன்...

விடுக்கின்றேன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி செயலர் விமலேஸ்வரி சிறீகாந்தறூபன் கட்சியின் தலைவருக்கும், செயலருக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, என்மீது நீங்கள் மேற்கொள்ள இருக்கின்ற விசாரணைக்கும், நடவடிக்கைக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். நீங்கள் எடுக்கும் முடிவை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக உள்ளேன். அதற்கு முன்னராக, எமது கட்சியின் சிலர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கின்ற கோரிக்கையையும் தங்கள் முன் தாழ்மையுடன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். என்னால் இதன்கீழ் பரிந்துரைக்கப்படும் விடயங்களுக்கு தங்கள் சட்ட நடவடிக்கைகளையும் ஒழுக்காற்று விசாரணைகளையும் செய்ய வேண்டும் என்பதனை நான் வெளிப்படையாகவே கேட்டுக் கொள்கின்றேன்.

சுன்னாகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால், அவரின் அறிவுறுத்தலின்படி மானிப்பாய் தொகுதி தமிழ் அரசுக் கட்சித் தலைவர் பிரகாஸால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தமிழ் மக்களின் விசுவாசத்திற்குரிய தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை தரம் தாழ்த்தி ஊடகவியலாளர் ஒருவரை வைத்து விமர்சித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுமந்திரனையும் கூட்டத்தில் இருந்து விமர்சிக்கும்போது கைகொட்டி ஆரவாரம் செய்த சயந்தன், ஹரிகரன், தயாளன் ஆகியோரையும் விசாரணைக்கு உட்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நானும், தமிழ்த் தேசியவாதிகளும் கட்சி உறுப்பினர்களும் தங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். இது தொடர்பான கருத்தை செல்வா நினைவுத் தூபிக்கு முன்னாள் நடந்த நேர்காணலிலும் நான் பல ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தேன்.

சுமந்திரனால் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட நேர்காணலில் வேதனையடைந்த தமிழ் மக்கள் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களில் இருந்தும் சுமந்திரனை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று தங்களுக்கு கொடுத்த அழுத்தத்தை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அதற்கு தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற் குழு நடவடிக்கை எடுக்கும் என்று மாவை சேனாதிராசா வழங்கிய உறுதி மொழி இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை உடன் நடைமுறைப்படுத்துங்கள்.

விடுதலைப் புலிகள்தான் ஏகப்பிரதிநிதிகள் என்று மக்கள் கொடுத்த ஆணையால் தான் 22 பேர் நாடாளுமன்றம் சென்றார்கள் என்பதனை யாரும் மறுக்க முடியாது. இன்று வரை சர்வதேச அங்கீகாரத்துடன் உள்ள மிகப் பெரும் மக்கள் ஆணையை கேள்விக்குட்படுத்தி 75 கள்ள வாக்குகளை நான் போட்டுள்ளேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூறியது தமிழ் அரசுக் கட்சிக்கு அவமானம் என்பதுடன் பொது வெளியில் எமது மக்கள் ஆணைக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கள்ள ஓட்டுக்கள் போட்டுத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 22 பேர் நாடாளுமன்றம் சென்றார்களா என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்வது? விடுதலைப் போருக்கு பின் எங்கள் பிரசன்னங்கள் கள்ள ஓட்டில்தான் கொண்டுவரப்பட்டதா? இதற்கான விசாரணையும் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தனது நேர்காணலால் தமிழ் இனத்துக்கும், தமிழ்த் தேசியத்துக்கும், தமிழ் அரசுக் கட்சிக்கும் மிகுந்த தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ள சிறிதரனுக்கு எதிராக, கட்சி எடுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை, நிச்சயம் ஒரு முன்மாதிரியான நடவடிக்கையாக இருக்கும் என்று நம்புகின்றேன். தமிழ்த் தேசியத்துக்கும் விடுதலைக்கும் எதிரான பெண் வேட்பாளர் அம்பிகா சற்குணநாதனை நானும் மிதிலைச் செல்வியும், சரோஜா சிவச்சந்திரனும் பெண்கள் அமைப்புக்களூடாக செய்த போராட்டங்களினால் வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கியபோதும் தேசியப் பட்டியலில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவை முதல் இடத்தில் இருந்து தவிர்த்து, வேட்பாளர் கையொப்பமிடும்போது அம்பிகாவை அழைத்து இருந்ததையும் எல்லோரும் அறிவார்கள்.

ஆனால், எம் இனத்துக்கு எதிரான ஒருவரை வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஒருவரை தேசியப் பட்டியலின் முதலாவதாக இன்று பெயரிடப்பட்டுள்ள அம்பிகா சற்குணராஜா 2018ஆம் ஆண்டு ஜெனிவா வரை சென்று எம் இனத்திற்கு எதிராக செயற்பட்டதை மனித உரிமைகள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், இவரது பெயர் உள்வாங்கப்பட்டமைக்கு விசாரணையும் சட்ட நடவடிக்கையும் உடனடியாகத் தேவை என்பதையும் தங்கள் முன்கோரி நிற்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பாளராகக் கொண்டு வரப்பட்ட சாணக்கியனும் தமிழருக்கு விரோதமாக 2010ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கை அரச சார்பு சுயேச்சைக் குழுவில் செயற்பட்டவர் என்பதனை உலகமே அறியும். நளினி இரட்ணராஜாவின் வேட்பாளருக்கான விண்ணப்பம் மட்டக்களப்பு வேட்பாளர் தெரிவில் இருக்கவில்லை. ஆனால், கொழும்பில் நடைபெற்ற வேட்பாளர் தெரிவில் இந்த விண்ணப்பம் மின்னஞ்சல் ஊடாக கொண்டு வரப்பட்டது என சுமந்திரனின் பிழையான வழிநடத்தல் ஊடாக இவரின் பெயர் உள் நுழைக்கப்பட்டது. இந்த முறையற்ற விண்ணப்பத்திற்கு யார் உடந்தையாக இருந்தார்கள்? விசாரணை செய்ய வேண்டிய தகுதி வாய்ந்த இடத்தில் இருந்த எமது கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் இந்த விடயத்தில் நேரடியாக தொடர்பு பட்டிருப்பதால் அவர் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுமந்திரனால் நடத்தப்பட்ட சகல நேர்காணல்கள் கூட்டங்களிலும், நானும் சம்பந்தர் ஐயாவும் தான் வேறு மொழி தெரிந்தவர்கள். சட்டத்தரணிகள் என்பதை பல தடவைகள் சொல்வதுடன் எந்த நேர்காணலிலும் எங்கள் தமிழ் அரசுக் கட்சி தலைவரை முன்னிறுத்தியது கிடையாது. இது தலைமையை மலினப்படுத்தும் செயலாகும். எதிர்காலத்தில் இவற்றுக்கு முடிவு வைக்கப்படவேண்டும். தமிழ் அரசுக் கட்சியில் இருந்து கொண்டே தமிழ் அரசுக் கட்சித் தலைவரை அவமதிப்பதை எப்படி விசுவாசிகளால் பார்த்துக் கொண்டிருக்கமுடியும்?. அதனால், தலைமைக்குக் கட்டுப்படும் நாம் உங்களிடம் வைக்கும் மிக முக்கிய கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை எடுத்து, தமிழ் அரசுக் கட்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், என்றுள்ளது. (ஒ.5)

## இளைஞரின்...


றுக் காலை இளைஞரின் சடல்மொன்றை வவுனியாப் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர். ராஜேந்திரன் விமலராஜ் (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நித்திரைக்குச் சென்ற இளைஞனை காலை தாயார் எழுப்பிய போது உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியாப் பொலிஸார் இளைஞரின் உயிரிழப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5.18)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு 07 . 04 . 1963

உதிர்வு 05 . 06 . 2020



### அமரர் சோமு தவராசா (தவம்)

கடந்த (05.06.2020) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

எமது துயரச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 233 4623

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 25 . 11 . 1980

ஆண்டவன் அடியில் 24 . 04 . 2020



### பாலச்சந்திரன் அஜந்தன்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் (தண்ணீர்தாழ்வு) உக்குழாங்குளம் வவுனியா, பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் அஜந்தன் 24.04.2020 பிரான்சில் காலமானார்.

அன்னார் பாலச்சந்திரன் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், முகுந்தன் (தொழில் அலுவலர், கிளிநொச்சி), மீரா, நிஷந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகதர்சினி (ஆசிரியர்), நகுலேஸ்வரன், சிந்துஜா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனனும், ரிஷாந்தினி, கஜந்தன் ஆகியோரின் அன்பு மாமாவும், மேருஷன், ஹரிஷ்னா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:

| | |
|---|---|
| தந்தை | - 077 288 2689 |
| பா.முகுந்தன் | - 077 721 8593 |
| ந.மீரா | - 076 525 1982 |
| பா. நிஷாந்தன் | - 0033 761 990 852 |

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 06 . 1955

இறப்பு 14 . 07 . 2019



### திருமதி பராசக்தி செல்லத்தம்பி (தேவி)

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா!

நினைவுகளுடன் வாழும்
செல்லத்தம்பி (சமரகோடி - கணவர்)
புவனேந்திரன் (மருமகன்),
கஜனி (மகள்), சஸ்மிதன் (பேரன்)

நாவற்குழி
வீரபத்திரர் கோயிலடி.

### உலகக்கிண்ணத்தில் சதம் கடந்த

# மகேல ஜெயவர்தனவும் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஜுலை 3

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் சதம் கடந்த முன்னாள் வீரர் மகேல ஜெயவர்த்தன, ஆட்டநிர்ணயம் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இன்று மகேல விசாரிக்கப்படவுள்ளார்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் தெரிவித்திருந்தார். இது நாடளாவிய ரீதியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து அந்த அணியில் இடம்பெற்ற வீரர்கள் அழைக்கப்பட்டு அவர்களிடத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் சதம் கடந்த மகேலவும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். (ம)




**தவறிவிட்டது**

செல்வச்சன்நிதி ஆலய திருமண நிகழ்வின்போது (02.07.2020) இரண்டு பவுண், பூட்டுக் காப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொ.இலக்கம்: 077 2719 829
ப.ஸ்ரீதரன்
மூளாய் வீதி.
வட்டுக்கோட்டை

யாழ்
**கலாலயா**
பயிற்சியகம்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பெற்றது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
சனி – ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.
மேலும் விபரங்களை மாணவிகள் நேரில் அறிந்து கொள்ளலாம்.
இயக்குநர்

**சேவை நலன் பாராட்டு வாழ்த்தும் மணிவிழா அகவை நிறைவும்**



**திருமதி இராஜரட்ணம் றஞ்சலாதேவி**
நிர்வாக உத்தியோகத்தர் (அதிசிறப்பு) - பிரதேச செயலகம், காரைநகர்

சேவைக்காலம்:
1982 மே - 1993 மார்ச் - பொலிஸ் அலுவலகம், யாழ்ப்பாணம்.
1993 மார்ச் - 2003 டிசம்பர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.
2004 ஜனவரி - 2014 நவம்பர் - பிரதேச செயலகம், சங்கானை.
2014 டிசம்பர் - 2016 ஆகஸ்ட் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.
2016 செப் - 2019 ஆகஸ்ட் - பிரதேச செயலகம், உடுவில்.
2019 செப் - 2020 யூலை - பிரதேச செயலகம், காரைநகர்

அன்பினால் விளைந்த நெஞ்சம்
அறிவினால் தோய்ந்த உள்ளம்
பண்பிலே உயர்ந்து நிற்கும்
பலரையும் மதிக்கும் அம்மை
பணியிலே தூய்மை பேணி
பலரையும் கவர்ந்த பெரியார்
60வது அகவை ஓய்விலே செல்லும் வேளை
உளமார வாழ்த்துகின்றோம்.
வாழ்க ! வாழ்க!
Congratulations
தங்களுடன் இணைந்து
சேவையாற்றிய உத்தியோகத்தர்கள்.

### 99 வீத...

பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த மீண்டும் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பிரதேசம் அல்ல என்று எல்லாவல மேதானந்த தேரர் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தானது தமிழர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன், எல்லாவல மேதானந்த தேரர் வெளியிட்ட கருத்து தவறானது என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்ததுடன் கண்டனத்தையும் வெளியிட்டிருந்தார்.

வாசுதேவ நாணயக்காரவின் இந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே எல்லாவல மேதானந்த தேரர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வாசுதேவ நாணயக்கார தனது அரசியல் கொள்கையின் பிரகாரமே அந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அதனை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால், வடக்கு பிரதேசமோ, கிழக்கு பிரதேசமோ தமிழர்களின் பூர்வீகம் அல்ல என்பது தொல்லியல் மூலம் உறுதியாகியுள்ளது. எனவே, இது பற்றி மேலதிகமாக கதைக்க வேண்டியதில்லை. இந்த விடயம் சர்வதேசத்துக்கும் தெரியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 99 சதவீதமான தொல்பொருள்கள் விகாரைகளுக்குரியது. ஆகவே, தமிழர்களின் பூர்வீகம் எனக் கூறமுடியாது.

தமிழ் மக்களுடன் எமக்கு எவ்வித விரோதமும் கிடையாது. அவர்கள் எமது சகோதரர்கள். அவர்களின் அடையாளங்களை பறிப்பதற்கு நாம் முயற்சிக்கவில்லை. முயற்சிக்கவும்மாட்டோம். அவர்களுக்குரிய கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றி சுதந்திரமாக வாழலாம்.

விவாதிப்பதற்கு சான்றுகள் அவசியம். தமிழர்களின் பிரதேசம் என்பதற்கான ஒரு சான்றுகூட இல்லை. இதனை சுட்டிக்காட்டுவது இனவாதமும் கிடையாது. பொலன்னறுவை யுகத்தின் இறுதிக் காலத்தில் இருந்து தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ ஆரம்பித்தனர் என்பதை ஏற்கின்றோம். ஆனால், பூர்வீகம் என்பதற்கான சான்றுகள் இல்லை என்பதை கூறிக்கொள்கின்றேன் என்றார். (ஒ,5,44)

### வீடொன்றின்...

இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடொன்றின் மீது இனம் தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டால் தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும் பெரியளவு சேதங்கள் ஏற்படவில்லை. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்களே தாக்குதலை நடத்தினர் என்று தெரியவருகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மஜ,20)

### சுமந்தி...

சுமந்திரனின் சொந்த இடமான வடமராட்சி முள்ளியில் வல்லிபுரக் கோவிலுக்கு அருகாக இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது. கொடும்பாவி எரிப்பைத் தொடர்ந்து சுமந்திரனுக்கு எதிரான குற்ற சாசனமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் வாசிக்கப்பட்டது. (ம)


**St. Patrick's College, Jaffna**
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்
புதிய அனுமதி - 2021

**2021 ஆம் ஆண்டுக்கான தரம்1, தரம் 6, வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

- தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2015 - 31.01.2016 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
- தரம் 6 இற்கு அனுமதி கோரும் மாண வர்கள் 01.02.2010 - 31.01.2011 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 15.07.2020.
- அனுமதிப் பரீட்சை 29.08.2020 சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை செல்லத்துரை**

தோற்றம்
12.03.1925

மறைவு
03.07.2018

அப்பா! நீங்கள் மறைந்து
இரண்டு ஆண்டுகள் சென்றபோதும்
எங்கள் நினைவில்
வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

51/3, அன்ன சத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வில் இறைவனுடன் 7ஆம் வருட நினைவஞ்சலி



அமரர் சின்னையா
**தவரெட்ணம்** (J.P)
(முன்னாள் தலைவர். யாழ். மாவட்ட கடற்றொழிலாளர். கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை பணிப்பாளர், சபை உறுப்பினர். வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)

மண்மகிழ
28.06.1940

கண்நெகிழ
03.07. 2013

ஆண்டுகள் ஏழு சென்றாலும் உங்கள் திருமுகம் காண
ஏங்கித்துடிக்கின்றோம். முடியவில்லை அப்பா!
உமது திருநாமம் ஆவது எம் காதுகளில்
ஒலிக்க வேண்டும் என்று உங்கள் பூட்டனுக்கு
உங்கள் நாமத்தைச் சூட்டியுள்ளோம்
ஆறுதில்லை அப்பா! எம்துயரம். ஏங்கித்தவிக்கின்றோம்
தினமும் உங்கள் பாசத்திற்காய்
நெஞ்சை விட்டகலா உங்கள் நினைவுகளுடன்
அனு தினமும் உங்களுக்காய் வேண்டுகிறோம்.

உங்கள் பாசத்தினால் வாடும்
குடும்பத்தினர்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 07 . 1935

மறைவு 02 . 07 . 2020

**இராஜசிங்கம் நித்தியானந்தன்**
**(ஓய்வுபெற்ற கணித பாட ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி)**

தெல்லிப்பளை துர்க்காபுரம் கே.கே.எஸ் வீதி, ராமகிரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் நித்தியானந்தன் (ஓய்வுபெற்ற கணிதபாட ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி) நேற்று (02.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம் மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ராஜமனோகரன் (பதிவாளர்), Dr.தெய்வேந்திரன், அருள்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலேஸ்வரதேவி, காலஞ்சென்ற Dr. செங்கமலம், கனகரட்ணம் (ஓய்வுபெற்ற உதவி பொது முகாமையாளர், இலங்கை வங்கி) மைத்துனரும், இராமகிருஷ்ணா, சாரதாமணி, மனோன்மணி, இராதாகிருஷ்ணா, கிருஸ்ணமணி, இரமணகிருஷ்ணா, இரஞ்சித கிருஷ்ணா, துஸ்யந்தி, தமயந்தி, செந்தூரன் ஆகியோரின் ஆசை அப்பாவும், காலஞ்சென்ற பிரியதர்சினி, உதயதர்சினி, ஸ்ரீராகவன் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2020) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்:
0777 561 341
021 205 9271

தகவல்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 . 06 . 1937

விண்ணில் 15 . 07 . 2019

அமரர் **இராசம்மா வல்லிபுரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பகுதித் தலைவர் - யா / மெமோறியல் ஆங்கில பாடசாலை)
திதி: 03.07.2020 [சதுர்த்தசி]

தலாட்டின் தாளத்திற்காய்
தாகமாய்த் தவிக்கின்றோம் அம்மா!

கண் கண்ட தெய்வமாய்க் காத்து
களைப்புற்றீரோ அம்மா!

மாசில்லா அன்பையும், வாழ்வையும்
மனதில் விதைத் தாயம்மா!

ஆண்டொன்று ஆகியும்
ஆறவில்லை உம் அரவணைப்பின் சூடு!

"ஜெயமகால்"
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்
077 612 7411

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 16.06.2019 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் வைரமுத்து சிவசாமி**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்தி கிரியைகள் இன்று (03.07.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கம்பர்மலை.

குடும்பத்தினர்

077 911 2135, 077 827 3150

## கண்ணீர்க் காணிக்கை

காங்கேசன்துறை
நடேஸ்வராக் கல்லூரியின்
புகழ்பூத்த கணித ஆசான்

**திரு. R.நித்தியானந்தன்**

அவர்களின் ஆத்மசாந்திக்காக
அன்னை புவனேஸ்வரி அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசானிடம் கணிதம் கற்ற
அன்பு மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
29 . 02 . 1929

இறப்பு
16 . 06 . 2019

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் பொன்னையா இராமநாதபிள்ளை (சின்ராசா)

அப்பா... எம் கனவில் கலந்த உங்கள்
எல்லையற்ற நினைவுகள் நிற்கின்றன நிழலாக
உங்களை இழந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகமும் நேசப்புன்னகையும் மறையவில்லை எம்மைவிட்டு
வருடங்கள் நீண்டாலும் உங்கள் நினைவுகள் நீங்காது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் இதயத்தோட்டத்தில்
பூத்துக்கொண்டிருக்கும் உங்கள் நினைவுகள்

உங்கள் நினைவில் வாடும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
08 . 05 . 1948

ஆண்டவன் அடியில்
14 . 07 . 2019




### அமரர் நடராசா சிவசோதி

திதி - திரயோதசி

ஆண்டொன்று சென்றாலும்
நீங்கவில்லை உம் நினைவுகள்
குடும்பத்தோடு கூடிக்குலாவி
பல ஆண்டுகள் உடனிருப்பீர் என்றிருக்க
பாதியினில் பரிதவிக்கவிட்டு சென்றதேனோ?
ஏழேழு ஜென்மங்கள் கடந்தாலும்
அப்பா என்றும் உம் நினைவுகள்
எம்முடன் வாழும்!
என்றும் உங்கள் நினைவுகளுடன்..

**மனைவி, மகள்மார், மகன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு
21 . 02 . 1961

இறப்பு
02 . 07 . 2020

### சிவபாதம் சிவானந்தராசா

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் சின்னத்தம்பி அவனியு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் சிவானந்தராசா நேற்று (02.07.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் சரஸ்வதியின் அன்பு மகனும், சாந்திதேவியின் (வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், நிதி உதவியாளர்) பாசமிகு கணவரும், அபிராமி, அச்சுதன் (சம்பத் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் தந்தையும், ஜோன் பிரியந் (Clinical Research Coordinator) மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2020) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பல்லோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சின்னத்தம்பி அவனியு,
மானிப்பாய்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை சண்முகசுந்தரம் (சண்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பங்களா ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சண்முகசுந்தரம் கடந்த (27.06.2020) சனிக்கிழமை சவூதியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கேசவன்-புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலநாயகியின் பாசமிகு கணவரும், அஜிதா (கொமர்ஷல் வங்கி - பெட்டா), ஜசிந்தா (புள்ளிவிவர திணைக்களம் - மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), கேசவர்மன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிர்மல்காந்தின் (கொமர்ஷல் வங்கி - வெள்ளவத்தை) அன்பு மாமனும், ஆதித் தனின் அன்பு பேரனும், விஜயலட்சுமி, கமலாதேவி , தாரணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற திருமால் மற்றும் தெய்வேந்திரா, கணேஷ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (02.07.2020) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணியளவில் சவுதிஅரேபியாவில் Al Ho Fuf எனும் இடத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

# ராஜபக்சக்களினது வாக்குறுதியை நம்புவதில் இனியும் அர்த்தமில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உறுதிபடத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

ராஜபக்ச தரப்பினர் என்றாலென்ன, அவர்களின் அடிவருடிகள் என்றாலென்ன எவ்வளவு உயர்ந்த வாக்குறுதிகளை வழங்கினாலும் நாம் பலமாகவும் உறுதியுடனும் நின்று அழுத்தங்களை கொடுத்தால் மட்டுமே எமக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ள முடியும் இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

அரச ஆதரவாளர்களாக போட்டியிடும் ஈ.பி.டி.பி அணியினரோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களின் அணியினரோ அரசுக்கு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அழுத்தங்களை கொடுக்கப்போவதில்லை. அப்படிக்கொடுப்பதற்கான வலுவும் அவர்களிடமில்லை - என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ச குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது 'ஒன்றுபட்ட நாட்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தமது அரசு தயாராக உள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நீண்ட காலம் வடபகுதியில் பணியாற்றியமையால் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்துள்ளார்' எனத் தெரிவித்திருந்தார். இதற்கு விடுத்துள்ள பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

புதிய அரசியலமைப்பை உருவாக்க அல்லது அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து பத்தொன்பதாவது அரசியல் திருத்தத்தை நீக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் தமக்கு வழங்கும்படி மக்களிடம் மஹிந்த கோரிவரும் நிலையில் அவரால் இப்படியொரு கருத்து முன்வைக்கப்ட்டுள்ளது. ஏற்கனவே அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு ஆதரவைக் கோரியிருந்த நிலையில் இப்படியொரு கருத்து அவரிடமிருந்து வெளிவந்தமையை அலட்சியம் செய்துவிட முடியாது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் மகிந்த ராஜபக்ச ஐ.நா சபை செயலருக்கு இனப்பிரச்சினைக்கு நியாய பூர்வமான தீர்வு வழங்கப்படுமெனவும் இந்திய அரச தரப்பினருக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் மேலதிகமாகவும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுமெனவும் வாக்குறுதியளித்திருந்தபோதும் அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மேற்கொள்ளுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்படவுமில்லை. அதுமட்டுமின்றி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு அவற்றின் மூலம் எவ்வித தீர்வும் எட்டப்படாமலே அவை கைவிடப்பட்டன. அத்துடன் அவரின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் மேலும்மேலும் பல்வேறு வடிவங்களில் அதிகரிக்கப்பட்டன.

இப்படியான நிலையில் மகிந்த ராஜபக்சவின் வாக்குறுதியை நம்ப முடியுமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

அரச ஆதரவாளர்களாக போட்டியிடும் ஈ.பி.டி.பி அணியினரோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களோ அரசுக்கு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அழுத்தங்களை கொடுக்கப்போவதில்லை. அப்படிக்கொடுப்பதற்கான வலுவும் அவர்களிடமில்லை. இவர்கள் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் சலுகை அரசியலுக்கு கையேந்தி நின்றனரே ஒழிய உரிமைகளைப் பெறுவதற்கான ஒரு சிறு நகர்வைக்கூட மேற்கொள்ளவில்லை. இவர்கள் வழங்கும் வாக்குறுதிகளின் போலித்தன்மையை புரிந்து கொள்ளவேண்டும். எனவே நாம் இவர்கள் விடயத்தில் விழிப்புடன் இருந்து அவர்களை நிராகரிக்க வேண்டும்.

ராஜபக்ச தரப்பினர் என்றாலென்ன, அவர்களின் அடிவருடிகள் என்றாலென்ன எவ்வளவு உயர்ந்த வாக்குறுதிகளை வழங்கினாலும் நாம் பலமாகவும் உறுதியுடனும் நின்று அழுத்தங்களைக் கொடுத்தால் மட்டுமே எமக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எமது முழு ஆதரவை வழங்குவதன் மூலமும், எங்கள் மத்தியிலும் எங்களுக்கு வெளியேயும் எங்களுக்காகப் பாடுபடுபவர்கள் போன்று வேசமிடுபவர்களை இனங்கண்டு முற்றாக நிராகரிப்பதன் மூலமும் நாம் தமிழ் மக்களின் பலம்பெற்ற சக்தியாக எழுந்து நின்று எமது உரிமைகளைப் பெறும் பயணத்தில் உறுதியுடன் முன்செல்வோம் என்றுள்ளது. (ம)

---

### வெள்ளைக்...

இறுதிப் போரில் வெள்ளைக் கொடிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சரத் பொன்சேகாவிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இறுதிப் போரின் இறுதித் தருணத்தில் களத்தில் நான் நிற்கவில்லை. வெளிநாட்டில் நின்றேன். எனினும், வெள்ளைக் கொடிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சரணடைய வந்தார்கள் என்பதை நான் அறிந்தேன். இதனுடன் தொடர்புடைய குரல் பதிவுகளும் என்னிடம் உள்ளன. கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அதை நான் வெளிப்படையாக முன்வைக்கவும் தயாராக இருக்கின்றேன். ஏனெனில் நடந்த உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். எதையும் மறைக்க முடியாது' என்றார்.

'வெள்ளைக்கொடிகளுடன் வந்தவர்களுக்கு இறுதியில் என்ன நடந்தது?' என்று அவரிடம் வினவியபோது, 'வெள்ளைக்கொடிகளுடன் சரணடைய வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைச் சுட்டுப் படுகொலை செய்துவிடுமாறு இராணுவத்துக்கு உயர்மட்டத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். எனினும், இறுதியில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது' -என்றார். (ம-22)

### புலிகள்...

பாடசாலை வளாகத்தினுள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடுகளின் போதும் மாணவர்கள் மனதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான எண்ணங்கள், சிந்தனைகள், அந்த அமைப்புத் தொடர்பான ஆர்வத்தைத் தூண்டும் எவையும் முன்னெடுக்கப்படக்கூடாது. இவ்வாறு கொழும்பு கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற பாடசாலை இல்ல விளையாட்டு நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின் போது விடுதலைப் புலிகள் அமைப்பை பிரதிபலிக்கும் வகையிலான படைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கடிதம் மூலம் அறியத்தரப்பட்டுள்ளதாகவும் பாடசாலை வளாகத்தினுள் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகளினூடாக எதிர்கால இளம் சந்ததியினரிடையே விடுதலைப் புலிகள் தொடர்பிலான எண்ணக் கருக்கள் அவ்வமைப்பு தொடர்பான உந்துதலை ஏற்படுத்தக் கூடும் எனவும் மேற்படி கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிணங்க இத்தகைய செயற்பாடுகள் மற்றும் படைப்புக்களை முன்வைக்கும் போது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சார்பான எண்ணக்கருக்களை உருவாக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கான உந்துதல் போக்கு பிரதிபலிக்கப்படுவதால் இதிலிருந்து பிரதேசத்தின் இளையோர் சந்ததியினரை விடுவிக்கும் முகமாக பாடசாலை வளாகத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளைத் திட்டமிடும் போது அவ்வாறான படைப்புக்களை தவிர்ப்பதற்கு வழிமுறைகளை எடுக்க வேண்டுமென்பதை அறிவுறுத்துமாறும் கோரியுள்ளனர், என்றுள்ளது. (ஒ,5)

### நேற்று...

கொழும்பு, ஜூலை 3

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்காரவிடம் நேற்று 10 மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த விசாரணைக்காக விளையாட்டுத்துறை அமைச்சின் சிறப்புப் பொலிஸ் விசாரணை பிரிவில் நேற்றுக் காலை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார முன்னிலையாகியிருந்தார். அவரிடம் நேற்று மாலை வரையில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயச் சூதாட்டம் இடம்பெற்றது என்று குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### இலங்கை...

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வீரர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றமைக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இதையடுத்து இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் தொடரில் விளையாடிய இலங்கை அணியின் தலைவரான சங்கக்கார உள்ளிட்ட பல வீரர்கள் இதுவரையில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றமைக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியால் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களான ஹர்ஷ டி சில்வா, ஜனகன் போன்றோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (ம)

### கடற்றொழிலுக்கு....

ளவில் சுண்டிக்குளம் கடற் பகுதியிலிருந்து 5 பேர் தொழிலுக்குச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் தொழிலின் போது கடலுக்குள் தவறி வீழ்ந்தார் என்று ஏனையோர் தெரிவிக்கின்றனர். அவரைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். மதுரங்குழியைச் சேர்ந்த நிரோசன் பிரதீப் என்பவரே காணாமல்போயுள்ளார். (ஒ,5,113)

### மாஸ்க்...

பொலிஸ் ஊடகப்பிரிவால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# பிணைமுறி மோசடிக்கு நடவடிக்கை எடுத்தால் பலரின் பதவிக்கு ஆபத்து!

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு,ஜூலை 3

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மிகச் சிறந்த ஆளுமையுடைய கோத்தாபய ராஜபக்சவால் தனித்து சிறந்த ஆட்சியை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் ஆட்சிக்கு வந்தால் மாத்திரமே எம்.சி.சி. ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் என்றும் போலியான வாக்குறுதிகளை வழங்கியே ராஜபக்சக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஆனால் தற்போது அதை மறந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தால் மாத்திரமே சேவையாற்ற முடியும் என்று கூறுகின்றனர். மீண்டும் மீண்டும் இவ்வாறான போலியான வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் மத்திய வங்கி பிணை முறி ஊழலுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. எனினும் தற்போது அந்த வாக்குறுதிகள் புறந்தள்ளப்பட்டுள்ளன. மூன்றில் இரண்டு

பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வது மாத்திரமே இவர்களது இலக்காகவுள்ளது.

தற்போது கொரோனா பரவலைக் கொண்டு அரசியல் செய்ய ஆரம்பித்துள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் கொரோனா பரவல் உள்ளதாகக் கூறுகின்றனர். பிரிதொரு சந்தர்ப்பத்தில் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். அதைத் தேர்தல் பிரசார மேடைகளில் பிரதான பேசு பொருளாக்கியுள்ளனர்.

தனியார் வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்களையும் , ஆரம்ப பாடசாலை மாணவர்களையும் அழைத்துக் கலந்துரையாடுகின்றனர். ஒரே சந்தர்ப்பத்தில் 500 மாணவர்களுக்கு கற்பிக்க வாய்ப்பளிக்கப்படும் என்று கூறுகின்றனர். இதன் மூலம் அவர்களது வாக்குகளைப் பெற்றுக் கொள்ள எண்ணுகின்றனர்- என்றார்.

(எ)



## மாவட்டச் செயலருக்கு பிரிவு உபசார விழா

மன்னார்,ஜூலை 3

மன்னார் மாவட்டச் செயலராக கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றி சிறப்பாகச் செயற்பட்ட சி.ஏ.மோகன்றாஸுக்கான பிரிவு உபசார விழா, மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கை நிர்வாக சேவையில் 30 வருடங்களைக் கடந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ மோகன்றாஸ் இந்த மாதம் 7 திகதியுடன் நிர்வாக சேவையில் ஓய்வு பெறுகின்றார். அதனையடுத்து மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

நிகழ்வில் மாவட்டச் செயலரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் பிரதேச செயலக மாவட்ட செயலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

ஓய்வுபெறும் மாவட்டச் செயலாளரின் நிர்வாக காலப்பகுதியிலேயே மன்னார் நகர பொது பஸ் நிலையம் மற்றும் மன்னார் பிரதேச செயலக காணிக்கிளை போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட மடு உள்ளக வீதி அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், சிறுபோகச் செய்கையின் போது ஏழை விவசாயிகளுக்கு நெற் செய்கைக்கு என காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-56)

## ஹெரோய்ன் வர்த்தகம்: 11 பொலிஸார் கைது!

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தில் கடமையாற்றிய 11 பொலிஸ் அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோய்ன் வர்த்தகம் தொடர்பான குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, தமது பொறுப்பிலிருந்த ஹெரோய்னை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சார்ஜன்ட்கள் இருவரும், கான்ஸ்டபிள் ஒருவர் ஏற்கனவே குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(எ-ரி1)

## கைதிகளை பார்வையிடமீண்டும் அனுமதி!

சிறைக் கைதிகளை பார்வையிடுவதற்கு நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரத்தில் ஒரு தடவை ஒரு சிறைக் கைதியை ஒருவர் மாத்திரம் பார்வையிட முடியும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

கைதியைச் சந்திக்க வருகின்ற நபர் அவரின் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிலிருந்து கொண்டுவரப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் குடிபானங்களை கைதிகளுக்கு வழங்குவதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் சுகாதாரப் பாதுகாப்பு பொருள்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய குறிப்பிட்டார்.

(எ-ரி1)

BARATHY
சித்தன்கேணி
புதிய இடத்தில்
கண்ணா கிளினிக் அருகில்
நாளை முதல் சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன
A/L கலை வர்த்தகம், தொழில்நுட்பம்.
A/L 2022, 2021, 2020
தரம் 6-11 வரை
சனி 3.00 மணி p.m
புதிய மாணவர்களும் அன்றைய தினம் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
[இரு இடங்களிலும்]
நாளை முதல்
A/L 2022, 2021, 2020
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
அனைத்து பிரிவுகளும் வழமையான நேர அட்டவணைப்படி ஆரம்பமாகின்றன.
Note:- A/L 2022 மாணவர்கள் நாளையிலிருந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
யாழ்.நகர் 0772209651
சுன்னாகம் 0766385294

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
மீண்டும் ஆரம்பம்
சனி[4/7], ஞாயிறு [5/7]
9.30am-2.30pm
•பதிவாளர்
•இறைவரிசேவை
•சட்டமானி நுழைவு
•SLTES,SLEAS,SLAS
•பல்கலைக்கழகம் விசேட கற்கை தெரிவு பொது உளச்சார்பு
T.P: 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ் ஆஸ்பத்திரி வீதி.
கொமர்ஷல் வங்கி அருகில்

வெற்றிடங்கள்
1. தாதிய உத்தியோகத்தர்கள்
2. வரவேற்பாளர்
3. துப்புரவுப் பணியாளர்கள்
4. சாரதி
5. அலுவலகப் பணியாளர்
சத்திர சிகிச்சைக்கூட அனுபவம் வாய்ந்த தாதிய உத்தியோகத்தருக்கு அதி உயர் சம்பளம் வழங்கப்படும்.
05.07.2020 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி தொடக்கம் நேர்காணல் நடைபெறும்.
New Yarl Hospital
Palaly Road, Parameshwara Junction, Jaffna.
தொடர்புக்கு: 077 310 7685

September 2020 பரீட்சைக்கான Banking வகுப்புக்கள் ஆரம்பம்
IBSL INSTITUTE OF BANKERS OF SRI LANKA
5ஆம் திகதி யூலை 2020 இல் ஆரம்பம் உடன் பதிவுகளுக்கு முந்துங்கள்....!
பின்வரும் அனுகூலங்களுக்கு
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
உடன் இணையுங்கள்
• இலகுவாக அடையக்கூடிய இடத்தில் அமைந்துள்ளது (பஸ்நிலையத்தின் பின்புறமாக)
• கல்வித்தகைமையுடைய மற்றும் வங்கித்துறையில் பல கால அனுபவம் வாய்ந்த விரிவுரை குழாமினால் விரிவுரைகள் நடத்தப்படும்.
• நேர அட்டவணை நெகிழ்ச்சியானது.
புதிதாக செப்டெம்பர் 2020 பரீட்சைக்கு தோற்றவிரும்புவோர் உடனடியாக இலங்கை வங்கியியல் நிறுவனத்தில் (IBSL) உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்
உங்கள் தொடர்புகளுக்கு:
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No.1, 2nd Lane, Power House Road, Jaffna.
Tel: 021 222 7770 / 077 763 3915
077 707 1601

NEC
1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
2. மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2022
கலை, வர்த்தகம்
கணித உயிரியல்
பிரிவுகளுக்கான
மீண்டும் ஓர் புதிய பிரிவு
ஆரம்பம்: 04/07/2020
சனி காலை 8.00 மணி
A/L 2020,2021 Day Class
மாணவர்களுக்கான புதிய பாட அலகுகள் ஆரம்பமாகின்றன
T.P: 077 469 6695, 076 5350999



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.